www.tamilarangam.net

# எண்ணம்

எண் 1
இல 10
1.7.83

ENNAM




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசிரியர் கருத்து.

தமிழ் மக்கள் இனிமேல் செய்ய வேண்டியது என்ன? கண்ட இடத்தில் சூடு. நீதி விசாரணை என்ற பேச்சிற்கே இடமில்லை. பசுக் கன்றைக் கொன்றதற்காக மைந்தனைத் தேர்ச்சில்லால் நெரித்துக்கொன்ற மனுச் சோழனின் வழித்தோன்றல்கள். அந்த நாகரீகத்தில் வாழ்ந்து பழக்கப்பட்ட பரம்பரைகள். இனியும் இழப்பதற்கு என்ன மிஞ்சியிருக்கிறது. இந்த அட்டூழிய ஆட்சியைத் தோற்கடித்துத் தமிழீழத்தை மலரச் செய்வதற்காக, தமிழ் மக்களை அணிதிரட்டப் பிரயத்தனப்படுபவர்களிடம் வழமையாகக் கேட்கின்ற கேள்வி தமிழ் மக்களை ஒற்றுமைப்படுத்திப் போட்டு எம்மிடம் வாருங்கள். என்பதை அடிநாதமாகக் கொண்ட பலதபமான கேள்விகள்.

மேலெழுந்தமானத்தில் பார்க்கிறவர்களால் சாராம்சத்தை ஊடறுத்துப் பார்க்க முடிவதில்லை. உலகிலுள்ள எல்லாச் சமூகங்களும் சிக்கல் நிறைந்த சமூக சக்திகளால் பின்னிப் பிணைந்தவைகள்தான். அது முரண்பாடோடு உடன்பாடும் சேர்ந்த பிணைப்பே. World is composed of unity of opposits. where there is contradiction there will be unity. where there is unity there will be contradiction. உலகம் முழுவதும் எதிர்நிலைகளின் சேர்க்கையே. எங்கெங்கே முரண்பாடு தென்படுகிறதோ அங்கங்கே உடன்பாடும் உண்டு. எங்கெங்கே உடன்பாடுண்டோ அங்கங்கே முரண்பாடும் உண்டு.

அண்மைக் காலத்தில் தமிழ் சமூகத்தில் நடந்த சில நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனியுங்கள். மே 18ந் திகதி பிரபாகரன் தலைமையிலான புலி இயக்கம் கந்தர்மடம் வாக்குச் சாவடியில் சுட்டதைத் தொடர்ந்து வந்த கலவரங்களை யாவரும் அறிவர். கலவரம் ஆரம்பித்தது தான் தாமதம் திரு உமாமகேஸ்வரன் தலைமையில் இயங்கும் தமிழ் மக்கள் விடுதலைக் கழகத்தினர் வவுனியாவில் ஆகாயப்படையினரைச் சுட்டனர். அதனோடு



22ந் திகதி தமிழ் மக்களை ஆயுதம் எடுத்துப் போராடும்படி சுவரொட்டிகள் மூலம் அறைகூவல் விட்டிருந்தனர். இது ஐக்கியம் இல்லையா? இந்த ஐக்கியம் பேச்சுவார்த்தை மூலமோ, ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதன் மூலம் வந்ததல்ல. 1982 இன் நடுப்பகுதியிலே தமிழ்நாட்டில் பிரபாகரனும் உமாமகேஸ்வரனும் அடைபட்டிருந்த பொழுது இலங்கையில் இருந்து சென்ற சிரேஷ்ட வழக்கறிஞர் ஒருவரிடம் TELO இயக்கத்தினரே காசு கொடுத்து வேண்டிய நடவடிக்கைகளை எடுத்தனர்.

அடுத்து செப்டம்பரிலே குட்டிமணிக்கும் ஜெகனுக்கும் தூக்குத் தீர்ந்த பொழுது TELO இயக்கத்தின் இன்றைய தலைவனை பிரதீபனிடம் தானே வலிந்து சென்று என்ன உதவி வேண்டும் என்று கேட்டிருந்தார். திரு உமாமகேஸ்வரன். தமிழீழ விடுதலை இராணுவத்திற்கும் TELO வுக்கும் இடையேயுள்ள நெருங்கியுறவை விஸ்தரிக்கத் தேவையில்லை. அதுமட்டுமல்ல இன்றைய நெருக்கடிக்குள் உமாமகேஸ்வரனது கன்னையின் பெரும்பான்மைத் தோழர்களும், பிரபாகரன் கன்னையின் பெரும் பான்மைத் தோழர்களும் ஐக்கியப்பட்டு போராட வேண்டும் என விடாப்பிடியாய் நிற்பது ஈண்டு குறிப்பிட வேண்டிய விடயம். இங்கே குறிப்பிட்டுள்ள எல்லா இயக்கங்களும் ஒரு காலத்தில் பொருத்தமற்ற பெயரை வைத்துள்ள தமிழர் விடுதலைக் கூட்டணியின் கீறிய கோட்டைத் தாண்டாத அடிமைகளாக இருந்தனர். எல்லா இயக்கங்களுமே சிங்கள விரோத, தொழிலாள விரோத, கம்யூனிச விரோத முதலாளி வர்க்கம் என்ற ஒன்று உண்டென்ற சிந்தனையே இல்லாத சர்வதேச நோக்கற்ற இயக்கங்களாகவேயிருந்தனர்

இன்று இவை எல்லாமே தமது சொந்த வரலாற்று அனுபவத்தால் தமிழர் விடுதலைக் கூட்டணியின் துரோகத்தைக் கண்டு அதுவே விடுதலைக்குக் குந்தகம் என்பதையும் கண்டு, அதைத் தோற்கடிக்க வேண்டுமென்ற நிலைப்பாட்டை எடுத்து விட்டனர். எல்லாமே தமக்குத் சோசலிசத் தமிழீழம் வேண்டும் என்றும், தாமும் மாக்சீய, லெனினிச வாதிகள் என்றும் பிரகடனப்படுத்தி-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டன. அது மாத்திரமல்ல தாம் சிங்கள விரோத இனவாதிகள் இல்லையென்றும், தாம் சிங்கள தொழிலாள வர்க்கத்தோடும், முற்போக்குச் சக்திகளோடும் ஐக்கியப்படும் மூலோபாயத்தை ஒளிவு மறைவு இன்றி வெளிப்படுத்திவிட்டன. பெருமட்டக் கொள்கை முரண்பாடோ, இலட்சிய முரண்பாடோ இன்று இவைகளுக்குள் இல்லை. ஏன் இவையை இணைத்து ஓர் மையமான பாதுகாப்பு இராணுவத்தைத் தோற்றுவிக்கக் கூடாது. தடையாக இருந்தது யார்? 1981 இல் ஜேர்மனிக்கு வந்த கிளிநொச்சிப் பாராளுமன்ற உறுப்பினர் ஆனந்தசங்கரி ஓர் விடயத்தைப் பிரசித்தமாகக் கூறினார். 1981 இல் தமிழாராய்ச்சி மகாநாட்டிற்குத் தமிழ்நாடு சென்ற அமிர்தலிங்கம் பிரபாகரனும் உமாமகேஸ்வரனும் சென்னையிலே பிரசன்னமாகியிருந்தும் கூட தனித்துப் பிரபாகரனுடன் மாத்திரம் கலந்துரையாடிவிட்டு சென்றதாகக் கூறியிருந்தார். அன்று உமாமகேஸ்வரனுடன் கலந்துரையாடியிருந்தால் சிலவேளை இருவருக்கும் இடையில் உள்ள பிரச்சினை தீர்த்திருக்கலாம் என்றார்.

நான் பெரிது, நீ பெரிது என்று இழுபறிப்படும் இன்றைய சமத்துவமற்ற சமுதாயத்தில் ஒருவரைச் சந்தித்துவிட்டு மற்றவரைச் சந்திப்பது மனக்கிலேசத்தைத் தரும் காரியம் தான். யாருக்கு? மூலதர்ம ஆழமற்ற சிறு காற்றடிக்கவே பறக்கின்ற சருகுகளுக்கு.

அண்மையில் பிரான்சிற்கும், ஜேர்மனிக்கும் விஜயம் செய்த வைகுந்த வாசன் விடுதலைக்கான வேலைத்திட்டத்தில் அவர் வெறும் வெற்றுக் கோம்மையாக இருந்துங் கூட அவரிடம் ஓர் வீரம் இருந்தது. அதுதான் முகத்திற்கு உவப்ப வேசியாடாது இங்குள்ள சகல இயக்கங்களோடும் கலந்துரையாடினார். ஒருவர் கோபிப்பார் என்றதற்காக மற்றவர்களைச் சந்திக்காமல் செல்லவில்லை. Revolution needs not only rifles but also ability to speak and the power to convince. ஆயுதம் கொஞ்சுகின்ற கரங்களோடு அளவளாவும் ஆற்றலும் நம்பச் செய்யும் கலையும் விடுதலைக்கு வேண்டும். இவரைப் போன்ற



முன்முயற்சியும் பிரயத்தனமும் உடையவர்களுக்கு ஓர் மையமயமான பாதுகாப்பு இராணுவம் தேவையென்ற முன்னோக்கு இருந்திருந்தால் எல்லா இயக்கங்களையும் ஐக்கியப்படுத்தி, அணிதிரட்டி நெறிப்படுத்திப் பரிபூரணமாகப் பயிற்றிய இராணுவத்தை உருவாக்கியிருக்கலாம்.

ஆம்! இன்று செய்வதற்கு ஒன்றுதான் உண்டு. எரிந்து கொண்டிருக்கும் தமிழீழத்தின் பெயரால் கேட்கின்றோம். பசியாலும் பட்டினியாலும் வயிறு பற்றி எரிகின்ற தமிழ்ப் பாலகர்களின் பெயரால் கேட்கின்றோம். TELO வும், புலி இயக்கமும் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகமும் தமக்குள்ளே ஒருவரோடொருவர் கலந்துரையாட வேண்டும். தொடர்ந்து கலந்துரையாட வேண்டும். (Repeated discussion). அதாவது குட்டிமணி கண்ணையும், பிரபாகரன் கண்ணையும், உமாமகேஸ்வரன் கண்ணையும் செத்துக்கொண்டிருக்கும் தமிழினத்திற்குக் கஞ்சித் தெளிவு விட வேண்டுமானால் கலந்துரையாடுங்கள். கம்பராமாயணத்திலே தமிழனை இராவணனைப் பார்த்துக் கம்பன் சொல்கின்றார். "சிறியன சிந்தியாதான்" என்று. அதுவே தமிழ் மறவர்கட்கு இருக்க வேண்டிய ஒன்று. நேற்றுப் பிள்ளைத்தனமாக நடந்த அற்பசொற்ப விடயங்களைத் தூக்கிப் பிடிக்காமல் இன்ன விடயங்களைப் பற்றி பெரிதாகச் சிந்தியாமல் கலந்துரையாடுங்கள். ஏனெனில் நீங்கள் இலட்சியத்தால் ஒன்றுபட்டவர்கள்.

முத்துச் சிப்பியின் வயிற்றிலே முத்துப் பிறந்தவுடன் அது தாய்ச் சிப்பியை அழித்து விடுவதைப்போல வாழை குலை போட்டவுடன் அதுவே வாழைக்கு இயமனாக வந்து விடுவதைப்போல, மூங்கில் கன்று வளர்ந்தவுடன் காற்றுக்கு உரசப்பட்டு நெருப்பை உண்டாக்கி மூங்கில் காட்டையே அழிப்பதுபோல இன்று இவ்வியக்கங்கள் கலந்துரையாட மறுக்குமேயானால் TELO வாலும், புலி இயக்கத்தாலும், தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தாலுமே தமிழினம் பூண்டோடு அழியும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் ஈழ விடுதலை இராணுவம்

## THAMIL EELAM LIBERATION ARMY

தேவசேகரம். 25-5-1983

அன்புமிகு அன்னம் ஆசிரியருக்கு!

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

வணக்கம்.

தமிழீழம் தமிழருக்கே!

தமிழ் ஈழ விடுதலை இராணுவம்

தேவசேகரம் (தேவன்)
28-5-1983

செயலாளர் நாயகம்

குறிப்பு:- [illegible]

[illegible]

# தமிழ் ஈழ விடுதலை இராணுவம்

## THAMIL EELAM LIBERATION ARMY

### வீரமரணமெய்திய தியாகிகளை நினைவு கூருவோம்

### வீர மறவன் சிவகுமாரனின் நினைவு தினத்தை ஒட்டி (5-5-74) இப் பிரசுரம் வெளியிடப்படுகிறது.

தமிழீழ மக்களின் பூரணமான சுதந்திரத்தை வென்றெடுக்க சிறீலங்கா சிங்கள ஏகாதிபத்திய அரசுகளோடு பேச்சு வார்த்தை நடத்துவதோ, அவர்கள் தம் நலன் கருதி நடாத்தும் தேர்தல்களில் பங்கு கொள்ளுவதோ கூட்டம் வைத்து வீர வசனங்கள் பேசுவதோ சரியான வழியல்ல. எம் சுதந்திரத்தைப் பறித்து, எம்மை அடக்கி ஆள சிறீலங்கா அடக்கு முறை அரசு, எந்த ஆயுதத்தைப் பாவிக்கிறதோ, அதே ஆயுதத்தை நாமும் ஏந்தி அடக்கு முறைக் கெதிராகப் போராடினால் தான், வெற்றி கிட்டும் என அனுபவரீதியாக உணர்ந்து, அதை நடை முறையிலும் கடைப்பிடித்தவர், அண்ணன் சிவகுமாரன். தம்மை தம் உயிரை துச்சமாக மதித்து தமிழீழ மக்களின் சுதந்திரத்திற்காக போராடத் தயாராயிருந்த தமிழ் இளைஞர்களுக்கு, ஆயுதம் ஏந்திய போராட்டத்தில் குதித்தாலே சுதந்திரத்தை அடைய முடியும், என கூறி அதை செயலிலும் காட்டியவர் அண்ணன் சிவகுமாரன். தமிழீழ போராட்ட ஆரம்ப கட்டமான அன்று, சிவகுமாரனுக்கு ஆதரவளித்தால் அவரை காப்பாற்றினால் சிங்கள அரசால் தமக்கு ஆபத்து நேருமோ, என அஞ்சிய தமிழ் மக்கள் அவருக்கு சரியான முறையான பாதுகாப்பை ஆதரவை நல்கவில்லை. இந்நிலையில் இவரை அரச படைகள் தீவிரமாகத் தேடவே, இவர் தமிழீழத்திலிருந்து, தப்பி தமிழ் நாடு செல்வதற்குரிய முயற்சிகளிலீடுபட்டார். அம் முயற்சியின் போது இவரை ஆக்கிரமிப்புப் படைகள் நெருங்கவே, எதிரியிடம் சரணடைய கூடாதென்ற உண்மை வீரனுக்குரிய போர்க்குணத்தோடு அவர் தன்னைத் தானே அழித்துக் கொண்டார்.

www.tamilarangam.net

ஆளே இருந்தாலும் இறந்தாலும் ஆயிரம் பொன், என்பதற்கமைய அவர் எதிரியிடம் சரணடையாது தன்னைத் தானே அழித்துக் கொண்டதை, அறிந்த தமிழினம், பொங்கி எழுந்தது. ஏறத்தாழ மூன்று நாட்கள், உரும்பிராய் மண், வீர மைந்தனுக்கு அஞ்சலி செலுத்த தமிழினத்தின் நாலா பக்கங்களிலும், சிறீலங்காவிலும், இருந்து வந்த மக்களின் கூட்டத்தை சுமக்க முடியாமல் சுமந்து வீரத் தியாகிக்கு தன்னால் செய்யக் கூடிய மரியாதையை செய்தது.

இதே போல் தமிழீழ விடுதலைக்கு போராடிய ஒரே காரணத்திற்காக, வவுனியா காட்டில் ஆக்கிரமிப்பு இராணுவத்தால் சுட்டுக் கொலை செய்யப்பட்ட கணேசலிங்கம், நடேசலிங்கம், கிருஷ்ணகுமார் (காத்தான்) போன்ற உண்மைத் தியாகிகளிற்கு தமிழீழ விடுதலை இராணுவம், தம் வீர வணக்கத்தை தெரிவித்துக் கொள்கிறது.

சுந்தரம் எனும் சிவசண்முக மூர்த்தி, இறைகுமாரன் ஆகியோர் தமிழீழ விடுதலைக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர்கள். முன்னவர் ஆயுதம் மேந்திய போராட்டத்தில் குதித்தவர், மற்றவர் மக்கள் விடுதலைப் போராட்டத்தில் பங்கு பற்ற வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியவர். 1980-ம் ஆண்டு இறுதியில் விடுதலைப் புலியியக்கம் கலைக்கப்பட்டபின் முன்னவர், உமா கோஷ்டியிலும், பின்னவர் பிரபா கோஷ்டியிலும் சேர்ந்து இயங்கினர். இரு கோஷ்டி தலைவர்களிற்கு இடையில் ஏற்பட்ட மனக்கசப்பால் அப்பாவிப் போராளிகள் பலியாகினர். இச் சம்பவங்களின் போது உமா பாலன் என்பவரும் உமா கோஷ்டியின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியானர்.

நாம் எல்லோரும் தமிழ் மக்களின் விடிவிற்காகப் போராடுவர்கள். எம் மத்தியில் கருத்து வேறுபாடுகள் வரலாம். ஆனல் அவை நிச்சயம் பேசியே தீர்க்கப்பட வேண்டும்.

**எம்மிடமுள்ள துப்பாக்கிகள் ஆக்கிரமிப்பாளருக்கும் சமூக விரோதிகளுக்கும் எதிராகவே பயன்படுத்தப் வேண்டும். குறிப்பிட்ட ஒரு இயக்கத் தலைவரையோ உறுப்பினரையோ தீர்த்துக் கட்டுவதன் மூலம் அந்த இயக்கம் அழிந்த வரலாறில்லை.**

போராளிகள் மத்தியில் ஆரம்பித்த துப்பாக்கிச் சூடு சுந்தரத்தில் தொடங்கி, இறை குமாரன் உமாபாலனில் தொடர்ந்து இந்தியாவில் பாண்டி பஜாரில் உமா, பிரபா, நேரடி மோதலில் முடிந்துள்ளது. இன்று உமாவும் அவர் கோஷ்டியைச் சேர்ந்த இருவரும் இந்தியச் சிறையில்.

இக் கதை தொடருவது போல் ஈழ மாணவர் பொது மன்றக் காரியாலயத்திற்கு முன் அண்மையில் குண்டு வைக்கப்பட்டுள்ளது. ஈ. மா. பொ. மன்றம் விடுதலைக்காக தன்னாலானதைச் செய்கிறது. அவர்கள் பகிரங்கமாக இயங்குபவர்கள். தாராளமாக பிரச்சனைகளை அவர்களுடன் நேரில் பேசலாம். தயவு செய்து இனியும் போராளிகளுக்குள் சுட்டுக் கொள்வதை நிறுத்துங்கள். இக் கதை தொடருமாயின் நிச்சயம் தமிழீழ விடுதலைப் போராட்டம் அழிவுப் பாதையிலேயே செல்லும்.

தமிழீழ மக்களே! பெடியன் தமிழீழம் காண்பார்கள் என்று நீங்கள் நிம்மதியாக உறங்குங்கள், தொடர்ந்தும் நீங்கள் பார்வையாளராக இருந்தால், ஒரு நாளைக்கு மேலுலகில் இருந்து தமிழீழம் சுடுகாடாக இருப்பதையே நீங்கள் பார்க்கப் போகிறீர்கள். விடுதலை இயக்கங்கள் என்ன செய்கின்றன. செய்வது சரியா பிழையா என்று சிந்தியுங்கள். சரி என்றல் பாராட்டுங்கள், பிழை என்றல் கண்டித்து தொடர்ந்தும் அப்பிழையை செய்ய விடாது தடுங்கள்.

திரிகோணமலையிலிருந்து இன வெறி ஆக்கிரமிப்பாளரை துரத்தி அடிப்போம், என்று கர்ஜித்த வண்ணம் வெகுண்டு எழுந்த கதிர்காமத்தம்பி, எதிர் பாரா வண்ணம் இன வெறிப் படைகளால் கைது செய்யப்பட்டு குருநகர் இராணுவ முகாமில் வைத்து மிகக் கொடூரமாக சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளார். இவ்வருமை உடன் பிறப்புக்களுக்கு விடுதலை இராணுவத்தினராகிய நாம் வீர வணக்கத்தை செலுத்துகிறோம்.

லண்டன் பல்கலைக் கழகத்தில் பொறியியல் துறையில் இரு பரீட்சைகளில் திறமை சித்திபெற்று, இறுதிப் பரீட்சையை உதறி எறிந்து, தங்கத் தமிழீழம் அமைத்த பின்பே பட்டங்களையும் பதவிகளையும் பற்றி சிந்திப்பேன், என கூறிய வண்ணம் இங்கிலாந்திலிருந்து தமிழீழத்திற்கு அடக்கு முறையை உடைத்தெறிய பறந்து வந்து சுணத்தில் எதிர்பாரா வண்ணம் கூலிப்படைகளால் கைது செய்யப்பட்டார். தன்னம்பிக்கையுடைய தம்பிப்பிள்ளை மகேஸ்வரன்; இவர் சிறீலங்காவில் பலத்த காவலைக் கொண்ட பனாகொடைத் தலைமை முகாமில், இரண்டு வருடம் காவலில் இருந்தார். "வல்லவனுக்கு புல்லும் ஆயுதம்" என்று கூறி சிறைக்கம்பிகளை தன்கைக்கு அகப்பட்ட துரும்புகளால், பலகாலமாக தொடர்ந்து முயற்சித்து அறுத்தெறிந்து, சுற்றிவர இருந்த இராணுவத்தின் கண்ணில் மண்ணைத் தூவி முகாமிலிருந்து தப்பினர்.

சிறீலங்கா தலைநகரில் எத்தனையோ தமிழர்கள் மாட மாளிகைகளோடு, பெரு வசதிகளோடு வாழ்ந்தும், இந்த மாவீரனை வைத்துக் காப்பாற்ற யாரும் முன்வரவில்லை. ஏழை இஸ்லாமிய தமிழ் குடும்பமே, இவருக்கு ஆதரவளித்துக் காப்பாற்றியது. பத்து நாட்கள் சிறீலங்காவின் தலைநகரிலேயே ஆட்சியாளருக்கு கடுக்காய் கொடுத்து, மறைந்திருந்த மாவீரன் 11ம் நாள் கூலி படைகளால் கைது செய்யப்பட்டான். அம்மாவீரனோடு விடுதலை இராணுவம் தொடர்பு கொள்ள முயற்சித்தும், தொடர்பு கிடைக்காததால் அவருக்கு எம்மால் உதவ முடியாமல் போனதையிட்டு மனம் வருந்துகிறோம். 10 நாட்கள் அவருக்கு பாதுகாப்பளித்து பராமரித்த, அவ் இஸ்லாமிய ஏழைத் தமிழ் குடும்பத்திற்கு விடுதலை இராணுவத்தினராகிய நாம் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

துண்டுப் பிரசுரம் மூலமும் நேரடி பிரசார மூலமும் தேர்தலை பகிஷ்கரிக்கும்படி நாம் கேட்டுக் கொண்டதை ஏற்று பெரும்பான்மையான மக்கள் தேர்தலை பகிஷ்கரித்தமையிட்டு சந்தோஷப்படுகிறோம். தமிழீழத்தை வென்றெடுக்க, விடுதலை இராணுவத்தினரோடு முழுமையாக தொடர்ந்தும் ஒத்துழைக்க வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.

சுந்தர்மடத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கோ, தேர்தலை ஒட்டி நடைபெற்ற குண்டு வெடிப்பு சம்பவங்களுக்கோ, நாம் பொறுப்பல்ல. சிங்கள வெறிபிடித்த J. R. இன் நாய்களின் பேரில், அவரின் கூலிப்பட்டாளங்கள் தமிழ் மக்கள் மேல் நடாத்திய இனவெறி தாக்குதல்களையும், மக்களின் சொத்துக்களிற்கு நாசம் விளைவித்ததையும், மிக வன்மையாகக் கண்டிக்கிறோம்.

சிங்கள ஆட்சியாளர்களே, மிக விரைவில் இனவெறிக் கூலிப்பட்டாளங்களை தமிழீழத்திலிருந்து வெளியேற்றுவதற்கான போராட்டத்தை, தமிழ் மக்கள் நடத்தியே தீருவார்கள். கூலிப்பட்டாளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். அவர்களுக்கு முடியுமான உதவியை செய்து வருகிறோம்.

எந்தவொரு வெளிநாட்டு ஏகாதிபத்திய, நில விஸ்தரிப்பு வாத சக்திகளின் தலையீடும் இன்றி, உண்மையான, பூரணமான, சுதந்திர தமிழீழத்தை, வென்றெடுக்க, சமதர்ம தமிழீழத்தை அமைக்க ஆயுதமேந்திய புரட்சிப்பாதையில் செல்லும் எம்மோடு, தமிழீழ மக்கள் அனைவருமிணைந்து போராட்டத்தை முன்னெடுக்க வருமாறு அழைக்கிறோம்.

தமிழீழம் தமிழனுக்கே! மலர்க சுதந்திர தமிழீழம்!!

தமிழீழ விடுதலை இராணுவ பிரசார பிரிவு ''தமிழீழம்''

16-5-83இல் வெளியிடப்பட்டது.

# தமிழ் ஈழவிடுதலை இராணுவம்

## புள்ளடி போட்டுக் கண்டது என்ன?

## தேர்தல் பாதையை முற்று முழுதாக நிராகரிப்போம்!

## ஆயுதமேந்திய புரட்சிப் பாதையில் 'சுதந்திர சமதர்மத் தமிழீழத்தை நோக்கிச் செல்வோம்!!

1948ஆம் ஆண்டு பிரித்தானியர் தமிழீழத்திற்கு சுதந்திரம் வழங்காது எம் இறைமையை சிறீலங்கா முதலாளிகளிடம் (சேனநாயக்காவிடமும், பண்டாரநாயக்காக்களிடமும் கொடுத்துச் சென்ற பின், தமிழீழத்திலும், சிறீலங்காவிலும் வாழும் தமிழ் மக்கள் இன்றுவரை 10க்கு மேற்பட்ட தேர்தல்களைச் சந்தித்துள்ளனர். சிங்கள முதலாளிகள் தம் நலன், ஆதிக்கவெறி, சுரண்டல் கருதி மாறி மாறி நடத்திய தேர்தல்களினால், தமக்கு உரிமைகள் ஏதும் கிடைக்கலாமெனக் கருதிய தமிழ் மக்கள், அத் தேர்தல்களில் ஆர்வமுடன் பங்குபற்றினர்.

தேர்தல் காலங்களில் தமிழரசு, தமிழ்காங்கிரஸ் கட்சிகள், தங்களைத் தேர்ந்தெடுத்தால், தாம் அரசோடு சாத்வீக வழிகளில் போராடி தமிழரின் உரிமைகளை வென்றெடுத்துத் தருவோம் என தமிழ் மக்களுக்கு வாக்குறுதியளித்தன. தமிழ் மக்களும் எ·க் கட்சியினர் உரிமைகளை வென்றெடுப்பது பற்றி மிக உணர்ச்சிகரமாகப் பேசுகிறார்களோ, அக் கட்சிக்கே தம் புள்ளடிகளைப் போட்டு வந்தனர். அதிக இடங்களில் வெற்றி பெற்ற தமிழரசுக் கட்சி அவ்வப்போ சத்தியாக்கிரகப் போராட்டங்களை தந்தை செல்வா தலைமையில் நடாத்தி வந்தது குறிப்பிடத்தக்கது. 1972இல் கூட்டணி அமைக்கப்பட்ட பின்பும், தந்தை செல்வாவின் இறுதிக் காலம் வரை அப்பப்போ அகிம்சைப் போராட்டங்கள் நடத்தப்பட்டன. தந்தையின் மறைவிற்குப் பின் இப்போதைய தளபதி தலைமையில் தேர்தலில் நின்று வெற்றியீட்டிய கூட்டணி, போராட்டங்களை முற்று முழுதாகக் கைவிட்டு, பாராளுமன்றத்தினுள் வாய் வீரம் பேச ஆரம்பித்தார்கள் அமெரிக்க உளவுத் துறையினரோடும் (C. I. A.) தர்மிஸ்டர் J. R. ரோடும் தொடர்ந்து பேசிக்கொள்வதால் இன்று பாராளுமன்றத்தினுள்ளும் வீரம் பேச பின்னடிக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1965ஆம் ஆண்டுகளில், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பிரதிபலிப்பாக சிறிலங்காவில செயல்படும் ஐ. தே. க. யினர் மேல், தமிழ் மக்களுக்கு நம்பிக்கை ஏற்படச் செய்ததன் மூலம, உலக முதலாளிகளுக்கு, ஏகாதிபத்தியவாதிகளுக்கு நாம என்றும் ஆதரவானவர்கள். உலகிலுள்ள ஏழை மக்களை, அமெரிக்க மேற்கத்திய நாடுகளும், சிறீலங்கா தமிழீழம் வாழ் மத்தியதர, ஏழை மக்களை, ஐ தே கட்சியும சுரண்டுவதற்கு நாம் என்றும் தபமை இனம காட்டியுள்ளனர். அமெரிக்க உளவுப் படையின் அன்பான வேண்டுகோளை, மிகப் பணிவோடு ஏற்று, த. வி. கூட்டணியினர் தமிழீழக் கோரிக்கையை மனதளவில் முற்று முழுதாகக் கைவிட்டு இடைக்கிடை தம் அரசியல் செல்வாக்கு குறையும் போது தம வயிற்றுப் பிழைப்பிற்காக, முனிவர்கள் நியானத்திலிருந்து எப்போதாவது விழிப்பதுபோல், தமிழீழம் என்று பேசுகின்றனர். 77 ஆம் ஆண்டு தேர்தல் காலங்களில் காலை முதல் மாலை வரை எம் காதுகளில் ஒலித்த "தமிழீழ சுதந்திர கீதத்தை" இன்று ஆசைக்குக் கூட கேட்க முடியாதுள்ளது.

எதையும் தாங்கும் இதயம் கொண்ட 10,000 தமிழ் இளைஞர்களை கூவி அழைத்தவர்கள், இன்று அதை மறந்து சிராவஸ்தியிலேயே வாழ்க்கை நடத்துகின்றனர் சிராவஸ்தயிலல்ல, அமெரிக்க வெள்ளை மாளிகைக்கே குடியேறச் சென்றாலும் நாம் அதைப் பற்றி இனி அக்கறை கொள்ளப் போவதில்லை இன்று தமிழ் இளைஞர்கள் தாமாக, தம் அசைக்க முடியாத உறுதியை "மூலதனமாக" இட்டு, ஆயுதமேந்திய புரட்சிப் பாதையில், தமிழீழ விடுதலையை நோக்கி முன்னேறிக கொண்டிருக்கிறார்கள். இப்படி தம் வாழ்வையே, தமிழ் மக்களின் நல் வாழ்விற்காக, சுதந்திரத்திற்காக அர்பணித்து உறுதியுடன் போராடி 1981 இறுதியில் ஆக்கிரமிப்பு இராணுவத்தினால், வவுனியாக் காட்டில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட தமிழீழப் பேராளிகளான நடேசலிங்கம், கனகலிங்கம் ஆகியோரின் வீர மரணத்தைப் பற்றி 19-12-81 "டெய்லி நியூஸ்" பத்திரிகைக்கு, தமிழீழமுதல்வர், தமிழர் தளபதி, செயலதுபர், நாவலர் அமிர்தலிங்கம் அல்ல மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் அளித்த பேட்டி பின்வருமாறு:- "தமிழீழப் பயங்கரவாதிகள் தான் சுட்டுக் கொல்லப்பட்டார்கள். மக்கள் பீதிகொள்ளத் தேவையில்லை. கடந்த சில கிழமைகளில் ஏராளமான பயங்கரவாதிகள் சிறீலங்கா பொலிசாராலும், இராணுவத்தாராலும் சுற்றி வளைக்கப்பட்டு பிடிக்கப்பட்டுள்ளனர். வவுனியாப் பகுதியில் பல கைதுகள் இடம்பெற்றுள்ளன. இப்பகுதி காடுகள் நிறைந்ததால் இப்பகுதியை பயங்கரவாதிகள் வாழ ஏற்ற இடமாகத் தெரிந்துள்ளனர்."

தந்தை செல்வாவிற்குப் பின் ஈழத்தமிழர்க்குக் கிடைத்த நம்பிக்கை நட்சத்திரம் என்று எல்லோராலும் அன்று வாயாரப் புகழப்பட்டவரே, இப்படி மிகக் குதூகலமாக அறிக்கை விட்டுள்ளாரெனில், நாம் இனி எந்த வாய் வீரரைத்தான் நம்புவதோ!

தமிழ் மக்களே! உங்கள் அனைவராலும் மிக அன்பாக நேசிக்கப்படும் விடுதலைப் போராளிகளாகிய நாம் அமிருக்குப் பயங்கரவாதிகளாம். "எங்கட பெடியள்" என்று நீங்கள் உரிமையோடு அழைக்கும் எம்மை அமிர் பயங்கரவாதியாம். எம்மை அமிர் பயங்கரவாதிகள் என்கிறாரென்றால், எம் இனத்தையே அழித்து ஒழித்துக்கொண்டிருக்கும் சிங்கள முதலாளிகளின் ஆட்சியாளர்களையும் (ஐ. தே. கட்சியினர்) அவர்களின் கைக் கூலிகளான பொலிஸ் இராணுவத்தையும் உத்தமர்களென்கிறார்களா! அவர்கள் செய்வதை முற்றிலும் சரி என்று ஏற்றுக்கொள்கிறாரா?

தமிழ் மக்களே! தேர்தல் கால நடிகர்களை தேர்தலை வைத்து பிழைப்பு நடத்துகிறவர்களை இனியும் தொடர்ந்து தேர்ந்தெடுத்து, எமக்கு எதிராகச் செயல்படவிடப் போகிறீர்களா? அல்லது உங்களுக்காக தம்மை துச்சமாக மதித்துப் போராடும், வீரமுள்ள, உறுதியுள்ள விடுதலைப் பேராளிகளோடு சேர்ந்து நீங்களும் சிறீலங்கா அரசு யந்திரங்களை தமிழீழத்திலிருந்து அகற்றப் போராடப் போகிறீர்களா?



நாம் சுதந்திரத்தைப் பெற்றுத் தருவோம்! நீங்கள் பார்த்துக்கொண்டிருங்கள் என்று கூறவில்லை எம்மைப் போன்ற உறுதிமிக்க போராளிகளாக தமிழீழ மக்கள் அனைவரையும் மாற்றுவோம், இன்று மாற்றிக் கொண்டும் இருக்கிறோம். என்றே நாம் கூறுகிறோம். அமெரிக்கா வரும், ரஸ்சியா வரும், இந்தியா வரும் என்று நாம் கூறவில்லை. வரவேண்டுமென்றும் நாம் கூற இலட்சத்திற்குட்பட்ட சிறீலங்கா படைகளை வெளியேற்ற, 30 இலட்சம மக்களையும், உறுதி மிக்க பேராளிகளாக மாற்றினால் போதும். மக்கள் சக்தியை மக்கள் போராட்டத்தை எந்த நவீன ஆயுதமும் வெற்றி கொள்ள முடியாது. இது வரலாறு.

1977 தேர்தலில், உங்களைப் போல், நாமும் இவர்களை நம்பி, இவர்கள் பேச்சை நம்பி தமிழீழம் பூராவும் இவர்களின் வெற்றிக்காக பகல் இரவு பாராது உழைத்தோம். இறுதியில் கண்டது என்ன? அன்று அருமைத் தம்பிமார் என்றவர்கள் இன்று எம்மைப் பார்த்து பயங்கரவாதிகள் என்கின்றனர்.

இனியாவது வெறும் வாய்வீரர்களை, தேர்தல் வீரர்களை, தமிழ் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தும் கூட்டங்களை, முற்று முழுதாக நிராகரிப்போம். சுதந்திர சமதர்ம தமிழீழம் மலரும் வரை சிறீலங்கா அரசு நடத்தும் தேர்தல்கள் அனைத்தையும் பகிஸ்கரிப்போம். எந்தவொரு அந்நிய ஏகாதிபத்திய, விஸ்தரிப்புவாத சக்திகளின் ஆதரவும் எமக்குத் தேவையில்லை. முழுத் தமிழீழ மக்களும், உண்மையான, பூரணமான, சமத்துவமான சுதந்திரத்தை அனுபவிக்க, ஆயுதமேந்திய புரட்சிப் பாதையில் வீறுநடை போடுவோம்.

**தமிழீழம் தமிழனுக்கே! மலர்க சுதந்திர தமிழீழம்!!**

தமிழீழ விடுதலை இராணுவ பிரசாரப் பிரிவு - "தமிழீழம்"

# பாதுகாப்பு இராணுவத்தைப் படைப்போம் என சரித்திரம் எம்மை நம்பியிருக்கிறது.

வரலாற்றின் உயர்ந்த நியதியானது எப்பொழுதும் பழையனதைத் தகர்த்தெறியும். ஏனெனில் அதனிடத்து புதியதை உருவாக்குவதற்காக. பழையன கழிதலும் புதியன புகுதலுமே தமிழ் மரபாகும். இக்கைங்காரியத்தை நிறைவேற்றுவதற்காக, பூகோளத்தின் பலகோடியிலுமுள்ள வெகுஜனங்கள் ஒரேமாதிரி ஒரே விதமான துப்பாக்கிகளை கையிலேந்தி நமக்கின்றோ சண்டை பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். கையிலேந்தி யுள்ள ஆயுதமும், போராடும் விதமும் ஒரே தன்மையுடையதாய் இருந்தாலும்; அவர்களது நோக்கம், வேறுபட்டமுமே வரலாற்றின் வித்தியாசமான சகாப்தங்களை பிரதிபலிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பணயாய் உள்ளன. அடிப்படையில் அவை மூன்று வரலாற்றுத் தோற்றங்களை எடுக்கின்றன. அவையாவன;

1. ஏகாதிபத்தியம்.
2. தேசியம்.
3. கம்யூனிசம்.

இந்தச் சண்டைகளிலே, மில்லியன் கணக்கான மக்களைப் பங்கு கொள்ளச் செய்த, ஒருவரோடொருவர் போராட வைப்பதற்கான ஆத்திரத்தையும், வெறுப்பையும் ஏற்படுத்தும் எண்ணங்களும், உணர்வலைகளும் சிந்தனைகளும் தேவைப்படுகின்றன. அவை வெகுஜனங்களின் தனித்துவமான சாதாரண சிந்தனைகளோடு ஒட்டுறவில்லாதனவாக தேர்ந்தெடுக்கப்படுவதால் அவை மக்களின் மனதை இலகுவில் கவருகின்றன. இதன் பிறகால் வெள்ளமென அள்ளுண்டு வந்த மக்கள் தாங்களது மிகக் கடுமையான அனுபவங்களின் இறுதியில் தாம் எதிர்பார்த்தவை மிக எட்டத்தில் இருப்பதை உணருகின்றார்கள். தாம் செய்த தியாகத்தின் பெறுமதியை எண்ணி மனம் நோகின்றார்கள். வெம்புகின்றார்கள். வெறுப்படைகின்றார்கள்.

"வரலாற்று மாற்றத்தை நன்றாக அறிந்து, அது தொடர்ந்து எப்போதும் மாறுமென்பதை உணர்ந்து அதைச் செய்வதற்கான, தனது வரலாற்றுப் பங்கென்ன என்பதை விளங்கி, அப்பெரு விளக்கத்தின் பேரால்; ஊசலாட்டமற்றதோர் முடிவுக்கு வந்த சுய பங்காளிகளான, மூலதர்மம் வழுவாதவர்களின் செறிவான சேர்க்கையே புரட்சிப்படையாகும். தனது இலக்கை எப்பொழுதும் நினைவில் நிறுத்தி, அவ்விலக்கையடையும் பிரயத்தனத்தில் குந்தகமேற்படா வண்ணம் தன்னொழுங்கிற்கு (SELF DISCIPLINE) வந்தவர்களாலான, கட்டுக்கோப்பானதும், மையமயமானதும் (COMPACT AND CENTRALIZED) ஆனதே புரட்சிப்படையாகும்." இறுக்கமான இந்தப் புரட்சிகர ராணுவமானது திரும்பத் திரும்ப நடாத்திய கலந்துரையாடல்களாலும், தெளிவான அறிகையாலுமே உருவாகும். (THE COMPACTNESS



OF THIS REVOLUTIONARY ARMY MUST BE FORMED BY REPEATED DISCUSSION AND PERFECT PERCEPTION). எவரது எண்ணங்களை அதிகூடுதலான மக்கள் ஏற்கின்றார்களோ அந்த மக்களோடு ஆத்மீகப் பிணைப்பை ஏற்படுத்தாது எந்த ராணுவமும் நிலைக்க முடியாது (BY WHOSE IDEA PROVES THE MORE CONVINCING FOR THE MASSES OF THE PEOPLE AND CAPABLE OF UNITING THEM IN THE SPIRITUAL BOND WITHOUT WHICH NO ARMY CAN EXIST). மக்களின் நானாவித தட்டுக்களோடும் ஆத்மீக பிணைப்பை ஏற்படுத்திய பின் இம் மக்கள் கூட்டத்திடமிருந்து புரட்சிப்படைக்கு வேண்டிய எல்லையற்ற சக்தியை உறிஞ்சி எடுக்கவல்ல உறிஞ்சிகளை ஏற்படுத்த வேண்டும். மக்களிடமிருந்து இராணுவத்திற்கு வேண்டிய எல்லையற்ற சக்தியை உறிஞ்சி எடுக்கும் பிரயத்தனங்களினூடே, வெகுஜனங்கள் இந்த இராணுவத்தின் இன்றியமையாத தேவையையும் புரிந்துகொண்டு, இவர்களுக்கு எல்லையற்ற சக்தியைச் சொரிவதில் உளத்திருப்தி அடையும் மனோநிலையும் ஏற்படப்பண்ண வேண்டும்.

யு.என்.பி அரசாங்கம் தனது பலதசாப்தங்களாக கட்டிவளர்க்கப்பட்ட ஆயுதப்படைகளின் துணைகொண்டு தமிழ்மக்கள் மேல் யுத்தத்தை பிரகடனப்படுத்தியிருக்கும் வேளையில் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களாகிய நாம் இன்னும் எமது பாதுகாப்பு இராணுவத்தை அணிவகுக்கத் தொடங்காத நிலையிலே உள்ளோம். இன்று நாமிருக்கும் நிலையிலிருந்து ஒரு பரிபூரணத்துவம் வாய்ந்த இராணுவத்தை கட்டி வளர்க்கும் நாளுக்கு இடையில் பல இடைநிலை கட்டங்களைக் கடந்து செல்ல வேண்டும். ஒன்று, அதுவரைக்கும் தமிழீழத்திலுள்ள எஞ்சியிருக்கும் வீடுகளையும் கடைகளையும் எரிய விடாது எவ்வாறு பாதுகாப்பது?

கடவுளே என்று கூட்டணிபற்றிய பிரமை ஆவியாகிப் போய்விட்டது. தமிழீழத்தைப் பாதுகாப்பதற்குக் குறுக்குவழி கிடையாது. தமிழ் மக்கள் அனைவரும் அரசியல் உணர்மையோடு மிக இறுக்கமாகவும் கட்டுக்கோப்பாகவும் அணிவகுக்கப்பட வேண்டும். நேற்று வரை இருந்த எங்களது பிற்போக்குத் தனம், ஆயுதம் எடுத்துப்

www.tamilarangam.net

போராடும்படி இன்று நிர்ப்பந்தித்துள்ளது. உலகத்தின் எங்காவது மூலையிலிருந்து கிளர்க்கலகம் (INSURRECTION) செய்கின்ற தொழிலாளி வர்க்கத்திடம் இருந்து எமக்கு உதவி கிடைவில்லை என்றால் நாம் அழிவது திண்ணம். அந்த வல்லமையுள்ள உதவி கிடைக்கும் வரை, நாம் எமது பாரம்பரிய பூமிகளை, உடமைகளை, உயிர்களை எவ்வாறு பாதுகாப்பது?

ஆம்! நேற்றுவரை அரசியல் பத்திரிகைகளை, துண்டுப்பிரசுரங்களை விற்பவர்களை, விநியோகிப்பவர்களை ஏளனம் செய்தது தமிழினம். உயிர்வாழ்வதற்கு காற்று எவ்வளவு அவசியமோ, அந்த மட்டத்திற்கு அரசியலும் அவசியம் என்பதனைக் கண்டுகொண்டது. தமிழ் மக்கள் அனைவரையும் அரசியல் என்ற அமுதக் கடலினுள் தள்ளிவிடுத்தினால் ஒழிய, வேறொரு சாவாமருந்து கிடைக்கப்போவதில்லை. அரசியல் உடன்பாட்டாலும், ஒருமைப்பாட்டாலும் ஐக்கியப்படுத்தி அணிவகுக்கப்பட்ட விடுதலை இயக்கத்தின் பூரண கட்டுப்பாட்டின் கீழேயே ஓர் பாதுகாப்பு இராணுவம் தோற்றுவிக்கப்பட வேண்டும். மறுதலையாக பாதுகாப்பு இராணுவம் புரட்சிர இயக்கத்தைக் கட்டி வளர்ப்பதென்பது தலையிருக்க வாலாடுவதாகும். "இராணுவம் (ARMY) என்பது அதன் உள்ளார்ந்த அர்த்தத்தில் முழுநேரமும் யுத்த மூலோபாய தந்திரோபாயங்களை கற்றவண்ணமும் சிந்தித்தவண்ணமும் இருக்க வேண்டும். அவர்கள் எந்த நிலைமைகளிலும் சிதறாவண்ணம் (DISORGANISED) உடற்பயிற்சியும், உளப்பயிற்சியும் கொண்டவர்களாக இருக்க வேண்டும்". இவர்களுக்கு வேண்டிய உணவு, உடை, ஆயுதம், மருந்து போன்ற தேவைகளை புரட்சிகர இயக்கமே வழங்க வேண்டும். இராணுவத்தினரது குடும்பத்தையும், அவரையும் தமிழ்மக்கள் மிகப் பாசத்தோடும், அக்கறையோடும் பராமரிப்பார்கள் என்ற அசையாத நம்பிக்கை ஏற்பட வேண்டும். பாதுகாப்பு இராணுவமே இவை எல்லாவற்றையும் செய்துகொண்டு போராட வேண்டும் என்றால் அது இலகுவான காரியம் அல்ல. கொரில்லாப் போராட்டமானது வெகுஜனப் போராட்டத்திலும் பார்க்க மிக மிகக் கடினமானது.



தமிழ் மக்கள் எப்போது (adventurisum) துணிகரச் செயல்களைச் செய்யாமல் (well calculated miltary operation) சிறப்பாகத் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கைக்குப் போவது. துணிச்சல் வாதம் என்பது அச்சம்பவத்தின்பின் தப்புவதற்கான சாத்தியக் கூறுகள் மிகக் சொற்பமானது. சிறப்பாகத் திட்டமிட்ட இராணுவ நடவடிக்கை என்பது தோல்விக்கான சாத்தியக்கூறுகள் மிகமிகச் சொற்பமானது.

சம தர்மத் தமிழீழத்தை அமைக்கப் பிரயத்தனம் எடுக்கும் பாதுகாப்பு இராணுவம்; சோஷலிசப் புரட்சிக்கு தலைமை கொடுக்கவல்ல புரட்சிக் கட்சி வேண்டும் என்பதை உதாசீனம் செய்ய முடியாது. மாக்சீய விதிமுறை புரட்சிக் கட்சியைக் கட்டியெழுப்பும் இடைநிலை கால கட்டங்களில் பாதுகாப்புக் குழுக்கள் ஏற்படுத்துவதையும் (DEFENCE SQUAD), கண்காணிப்புக் குழுக்கள் (VIGELENT COMMITTEE ஏற்படுத்துவதையும் செப்புகின்றது. அரசாங்கமும், பொலிசும் வேண்டுமென்று திட்டமிட்டு நடாத்தும் வழிப்பறி, கொள்ளை, கதவடைப்பு போன்றவற்றில் இருந்து தமிழ்மக்களைக் காக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டதுதான். அந்த அட்டூழியங்களுக்கு பலியாகும் அந்தந்த ஊர் மக்களை பாதுகாப்பு நடவடிக்கையின் பங்காளர் ஆக்காமல் குறிப்பிட்ட சிலர் அதற்கு பிரதிநிதியாக வருவது எத்தனை நாளுக்கு சாத்தியமாகும். புரட்சி நெருங்க, நெருங்க வான்டலிசமும் (VANDALISM) வளர்ந்து கொண்டே போகும். அதிலிருந்து தப்புவதற்குள்ள ஒரே ஒரு வழி மக்கள், ஊருக்கு ஊர், கிராமத்திற்கு கிராமம், தெருவுக்கு தெரு, ஒழுங்கைக்கு ஒழுங்கை அணிவகுக்கப்படல் வேண்டும்.

அணிவகுத்தல் என்பது என்ன? கட்சியினது சீரானதும், கட்டுக்கோப்பானதுமான கிளைகளை ஊருக்கு ஊர் ஏற்படுத்துவது தான். மக்களது வாழ்க்கை எழுந்தமான வாழ்வாக அமையாமல், தற்செயலாக ஏற்படும் சம்பவங்களுக்கு அடிபணிந்து செல்லாமல், புரட்சிக் கட்சியின் திட்டத்திற்கும், கட்டுப்பாட்டிற்கும் அமையச் செய்வதன் மூலமே கொலைகாரரிடமிருந்தும், கொள்ளைக்காரரிடமிருந்தும், [illegible] அந்திரபட்டைக்காரரிடமிருந்தும் தப்பி வாழலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தமிழீழம் எவ்வாறு சமதர்மப்பூங்காவாவது? நலுக்காக அணிவகுக்கப்பட்ட தமிழ் மக்களை திட்டமிட்ட உற்பத்தி, விநியோக செயற்பாடுகளை ஏற்க வைப்பது தானே! கொக்கு மீனுக்கிருக்க நண்டு தவளைக்கிழப்பது போன்று எழுந்தமானத்திற் செயற்பட்டுக்கொண்டிருக்கும் முழுத்தமிழ்மக்களையும் எவ்வாறு செவ்வனே அணிவகுப்பதென்ற பிரமாண்டமான பிரச்சனைக்கு முன்னால் பழைய அணிவகுப்புப் பொறுப்பேற்ற அத்தனை அரசியற் நாட்டாண்களும், அணிவகுப்புவேலையை விட்டிட்டு ஓடியதை தமிழீழ கிராமமும் நன்கே அறியும்.

அவிட்டுவிட்ட நெல்லிக்காய் மூடை மாதிரி அங்கொன்றும், இங்கொன்றுமாகத் திரியும் தமிழ்மக்களை சிந்தனை ஒருமைப்பாட்டிற்குக் கொண்டு வராமல் எவ்வாறு அணிவகுப்பது? அணிவகுக்கப்பட்ட இயக்கமென்பது உள்ளங்களை அணிவகுத்தலே. (AN ORGANISATION IS THE ORGANISATION OF MINDS) சமூகத்தின் மேல்கட்டுமானத்தின் (SUPER STRUCTURE) செயல்களையும், உள்கட்டுமானங்களின் (INFRA STRUCTURE) செயல்களையும், நாட்டின் அரசியல் பொருளாதார மாற்றங்களையும் கிரகியாமல் எவ்வாறு சிந்தனை ஒருமைப்படும். சிந்தனை ஒருமைப்பாட்டிற்கு சமுதாயமாற்றத்தின் கிரகித்தலும், அறிவும் ஏறத்தாழ சம அளவாக இருக்கவேண்டும். பெற்ற அறிவையோ, கிடைக்கும் அறிவோ சமமில்லாத கட்டத்து, மனித மூளைகள் இசைவாக சிந்திக்காத விடத்து, மக்களை அணிவகுப்பதென்பது சுத்தப் பொய்யாகும்.

ஆதலாற்றான் வெகுஜனங்களை அணிவகுப்பதற்காக பத்திரிகை போன்ற பிரச்சாரக் கருவிகள் பரந்தமட்டத்தில் கிளர்ச்சிகளைச் செய்ய வேண்டும் என்பதை மாக்ஸியவாதிகள் அங்கீகரித்தார்கள். மக்களை அணிவகுப்பதிலுள்ள பெருங்கஷ்டத்தை விளங்கித்தான், மாக்ஸியவாதிகள் தேர்தலில் பங்கு கொண்டார்கள். தேர்தல் காலங்களில் மக்களுக்கு அரசியல் ஆர்வம் இருப்பதைக் கண்டு கொண்ட மாக்ஸியவாதிகள் தேர்தலிற் பங்கு கொண்டார்கள். தேர்தலில் பங்கு கொண்டது வெறுமனே பாராளுமன்றம் போவதற்காக அல்ல. தேர்தலில்



பங்கு பற்றிய நாடுகளில் மேலும் மேலும் கூடுதலான புரட்சிக் கட்சியின் கிளைகளை அமைப்பதையே முன்னோக்காகக் கொண்டு செயற்பட்டார்கள்.

இன்று இலங்கையில் பகிஷ்கரிப்புவாதம் ஒரு பாஷனாகி விட்டது. விதைகளுக்காக விட்டுக்கொடுக்காமல் இரவல் கொடுக்கவல்லவர்களை இனம் காணாத தமிழ்மக்கள், பச்சோந்திகளை காலம் காலமாகப் பாராளுமன்றத்திற்கு அனுப்பிவிட்டு, இன்று தேர்தல்களே தேவையில்லை என்று சொல்வதாலே தங்களுக்கு புரட்சியாளர் முத்திரை குத்தப்பார்க்கிறார்கள். இலங்கையில் பகிஷ்கரிப்பு வாதத்தை அறிமுகப்படுத்திவைத்த சீனக் கம்யூனிஸ்ட் கட்சிச் சண்முகதாசன் அறுபதிலே தேர்தல்களில் பங்கு பற்றியவராகும். எழுபதிலே பீக்கிங் கம்யூனிஸ்ட் கட்சியிலே இருந்து பிரிந்துவந்த ரோகண விஜயவீரா சண்முகதாசன் தேர்தலில் பங்குபற்றிவிட்டுத்தான் பகிஷ்காரம் பேசுகின்றார். நாளை தேர்தலில் ஒருபோதும் பங்குபற்றவில்லை. பாராளுமன்றம் கள்ளர்குகை என்று கத்தியவர் இன்று தேர்தலில் பங்குபற்றுகின்றனர்.

மாக்ஸ் முதலாளித்துவ பாராளுமன்றத்திலோ, பாராளுமன்றம் மூலம் சோஷலிசம் கொண்டுவரலாம் என்பதிலோ எள்ளளவும் நம்பிக்கையற்றும் கூட பாராளுமன்ற முறைகளை நிராகரிக்கவில்லை. மாக்ஸிய, லெனினிசத்தோடு பரிச்சயம் இல்லாத தமிழ் இளைஞர்களை பாராளுமன்றம் மூலம் சோஷலிசம் என்று மொஸ்கோ கம்யூனிஸ்ட் கட்சிக்காரர்களும், தேர்தலை பகிஷ்கரித்தலே மாக்ஸியம் என்று சீனக்கம்யூனிஸ்ட் கட்சிக் காரர்களும் குழப்பு, குழப்பென்று குழப்பிவிட்டுள்ளனர். மாக்ஸ் எழுதிய "பிரான்சில் வர்க்கப் போராட்டங்கள்" என்ற புத்தகத்திற்கு ஏங்கல்ஸ் எழுதிய முன்னுரையின் ஒரு பகுதியை இங்கு அப்படியே பிரதி செய்கின்றோம்.

**1866-ல் கொண்டுவரப்பட்ட எல்லோருக்கும் சம வாக்குரிமை என்பதை ஜெர்மன் தொழிலாளர்கள் மிகவும் விவேகமாகப் பயன்படுத்தியதன் விளைவாக, கட்சியின் பிரமிக்கத்தக்க வளர்ச்சி உலகத்துக்கு மறுப்பேதும் கூற முடியாத புள்ளி விவரங்கள் மூலம் தெளிவாக்கப்பட்டது. 1871-102,000; 1874-352,000; 1877-493,000; சமூக-**

www.tamilarangam.net

ஜனநாயக வாக்குகள். அதற்குப் பிறகு, மேல் அதிகாரம் இந்த முன்னேற்றத்தை அங்கீகரித்து விட்டது என்பதற்கு அடையாளமாக சோஷலிச-எதிர்ப்பு சட்டம் இயற்றப் பட்டது. கட்சி தாற்காலிகமாக உடைக்கப்பட்டது. 1881-ல் வாக்குகளின் எண்ணிக்கை 312,000 ஆகக் குறைந்தது. ஆனால் அது விரைவிலேயே சரி செய்யப்பட்டது. அதன் பின்னர், விதிவிலக்கு சட்டத்தின் அழுத்தத்தின் கீழ், பத்திரிகை ஏதும் இல்லாமலும், சட்ட ரீதியான அமைப்பு ஏதும் இல்லாமலும், கூட்டம் கூடுவதற்கும், சங்கம் வைப்பதற்கும் உரிமை ஏதுமின்றியும், விரைவான பெருக்கம் உள்ளபடியே துவங்கிற்று. 1884—550,000; 1887-763,000; 1890-1,427,000 வாக்குகள். இதன் பேரில் அரசாங்கத்தின் கை செயலற்றதாகி விட்டது. சோஷலிச-எதிர்ப்புச் சட்டம் மறைந்தது; சோஷலிச வாக்குகளின் எண்ணிக்கை, அளிக்கப்பட்ட வாக்குகளில் கால் பாகத்துக்கும் அதிகமாக; 1,787,000 ஆக உயர்ந்தது. அரசாங்கமும், ஆளும் வகுப்பினரும் தங்களுக்குத் தெரிந்த கைவரிசையெல்லாம் தீர்த்து விட்டனர்—பயனற்ற வழியிலும் நோக்கமேதுமின்றியும், வெற்றியல்லாத வழியிலும் தீர்த்து விட்டனர். அவர்களது மலட்டுத்தனத்தின் கண் கூடான நிரூபணத்தை, இரவு காவற்காரன் தொட்டு, வேந்தர் வரை ஒத்துக் கொள்ள வேண்டியதாயிற்று—அதுவும் அவர்களால் வெறுக்கப்பட்ட தொழிலாளர்களிடத்தில். இந்த நிரூபணங்கள் பல இலட்சக்கணக்கில் எண்ணப்பட்டன. அரசாங்கம் அதன் கடைசி மூச்சிற்கு வந்து விட்டது. ஆனால் தொழிலாளர்களோ தங்களது முதன் மூச்சின் துவக்கத்திலே இருந்தார்கள்.

ஆனால், இது தவிர, ஜெர்மன் தொழிலாளர்கள் தங்களது இலட்சியத்திற்கு மகத்தான இரண்டாவது சேவையை முதலாவது சேவையுடன் சேர்த்து செய்துள்ளனர். அது இவர்கள் வலிமை மிக்கதும், சிறப்பான ஒழுங்கமைதி பெற்றதும், மிக விரைவான பெருக்கம் அடைந்து வருவதுமாகிய சோஷலிசக் கட்சியை உடையவர்களாக இருப்பதே இவர்கள் ஆற்றிய சேவையாகும். எல்லா நாடுகளிலும் உள்ள தங்களது தோழர்களுக்கு இவர்கள் புதியதொரு ஆயுதத்தை வழங்கினார்கள். இது மிகக் கூர்மையானவற்றில் ஒன்றாகும். எல்லோருக்கும் சம வாக்கு என்ற உரிமையை எவ்வாறு பயன்படுத்துவது என்பதை அவர்கள் காட்டியபோது இந்தப் புதிய ஆயுதம் பெறப்பட்டது.

நெடுங்காலமாக பிரான்சில் எல்லோருக்கும் வாக்குகள் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் போனபார்ட்டிஸ்ட் அரசாங்கம் அதைத் தவறான வழியில் பிரயோகித்ததன் மூலம் அது மரியாதை இழந்து விட்டது. கம்யூனுக்குப் பிறகு அதைப் பயன்படுத்துவதற்கு, தொழிலாளர் கட்சி ஏதும்



இருக்கவில்லை. குடியரசானதிலிருந்து ஸ்பெயினிலும் கூட அது இருந்தது. ஆனால், தேர்தல்களில் கலந்து கொள்ளாமலிருப்பதே எல்லா தீவிர எதிர்க்கட்சிகளின் பழக்கமாக எப்போதும் இருந்தது. எல்லோருக்கும் சம வாக்குரிமை பற்றிய ஸ்விஸ் நாட்டு அனுபவம், தொழிலாளர் கட்சி ஒன்றிற்கு ஊக்கம் தருவதாக மட்டும் இருக்கவில்லை. லத்தீன் அமெரிக்க நாடுகளின் புரட்சிகரமான தொழிலாளர் வாக்குரிமையை ஒரு கவர்ந்திழுக்கும் பொறியாகவும், அரசாங்கத் தந்திரத்தின் கருவியாகவும் கருதுவது பழக்கமாக இருந்தது. ஜெர்மனியில் இதற்கு மாறாக இருந்தது. கம்யூனிசப் பிரகடனம் எல்லோருக்கும் சம வாக்குரிமை என்பது பெறப்பட்டதையும், மக்களாட்சியையும், போராட்ட குணம் மிக்க பாட்டாளி வர்க்கத்தின் பணிகளில், முதலாவதாகவும், மிக முக்கியமானதாகவும் ஏற்கனவே வெளியிட்டிருந்தது. இந்த அம்சத்தை லசால் மீண்டும் தொடர்ந்திருந்தார். இப்போது, தம்முடைய திட்டங்களில் மக்கள் கூட்டத்தை அக்கறைக் கொள்ளச் செய்யும் ஒரே வழியாக இந்த வாக்குரிமையைப் பிஸ்மார்க் கொண்டு வரும்படி கட்டாயப் படுத்தப்படும் நிலையில் இருந்தபோது, நம்முடைய தொண்டர்கள் அதை மனப்பூர்வமாக உடனடியாக எடுத்துக்கொண்டார்கள். முதலாம் அரசியல் சட்டப் பாராளுமன்றத்திற்கு ஆகஸ்ட் பேபலை அனுப்பி வைத்தனர். அந்த நாள்தொட்டு, வாக்குரிமையை ஆயிரம் மடங்கு பலனளிக்கும் ஒரு வகையில் அவர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள். இது மற்றெல்லா நாடுகளின் தொழிலாளருக்கு ஒரு முன்மாதிரியாக விளங்கி இருக்கிறது. பிரெஞ்சு மார்க்சிய திட்ட நிரலின் சொற்களில், இந்த வாக்குரிமையானது "டிரான்ஸ்பார்மே டிமோயென்டி டூப்பெரி குவில் ஆ எட்டெ ஜூஸ்குயிசி என் இன்ஸ்ட்டுமெண்ட்டி எமான்சிப்பேஷன்" இதற்கு முன்னர் ஏமாற்றும் ஒரு கருவியாக இருந்தது. அவர்களால் உருமாற்றம் செய்யப்பட்டு, விடுதலையின் ஒரு கருவியாக ஆக்கப்பட்டது*. எல்லோருக்கும் வாக்குரிமை என்பது வேறு எந்த நன்மையை அளிக்கவில்லை என்று கொண்டாலும், அது நம்முடைய எண்ணிக்கையை மூன்றாண்டுகளுக்கு ஒரு முறை எண்ணிப்பார்த்துக் கொள்ள அனுமதித்தது. நம்முடைய வாக்குகளின் எண்ணிக்கை எதிர் பாராத விரைவான வளர்ச்சியுற்றதாலும், அது முறையாக ஊர்ஜிதப் படுத்தப்பட்டதாலும் தொழிலாளர்கள் வெற்றி பெறுவதன் நிச்சயத்தை சம அளவில் அதிகரிக்கச் செய்தது. அவர்களது எதிரிகள் குழப்பமடைவதையும் அதிகரிக்கச் செய்தது. ஆகவே அது நமது பிரச்சாரத்தின் தலை சிறந்த வழியாயிது. நம்முடைய சொந்த பலத்தைப் பற்றியும், எல்லா எதிரிக் கட்சிகளைப் பற்றியும், அது துல்லியமாக எடுத்துக் காட்டியது. அதன் மூலம் நமது நடவடிக்கைகளுக்குச் சீரானதோர் அளவை எவருக்கும் சளைக்காத முறையில் அளித்தது என்பதோடு

* இந்தச் சொற்றொடரானது மார்க்ஸால் எழுதப்பட்ட பிரெஞ்சு தொழிலாளர் கட்சி வேலைத் திட்டத்தின் முன்னுரையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். 1880-ல் கட்சியின் ஹாவ்ரே காங்கிரசில் இந்த வேலைத் திட்டம் அங்கீகரிக்கப்பட்டது—ப.சீ.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்மைக் காலமல்லாத காலத்து ஊக்கமில்லாமையிலிருந்து நம்மை பாதுகாத்ததோடுங் கூட, காலமல்லாத காலத்து முரட்டுத் தனங்களிலிருந்தும் நம்மை பாதுகாத்தது—இது ஒன்றுதான் வாக்குரிமையிலிருந்து நாம்பெற்ற நன்மை என்று கொண்டாலும், அதுவே போதுமானதற்கும் அதிகமாகவே இருந்தது. ஆனல் அது இதைவிட இன்னும் அதிகமாகவே நன்மைளிப்பதாக இருந்தது. தேர்தல் போராட்ட காலத்தில், மக்கள் கூட்டத்தோடு தொடர்பேற்படுத்திக் கொள்ளும் ஒரு வழியை அது எவருக்கும் குறைவில்லாத முறையில் அளித்தது. மக்கள் கூட்டம் இன்னும் நம்மிடத்திலிருந்து விலகி நிற்கும்போது இது கிடைத்தது. தங்களது கருத்துக்களையும், நடவடிக்கைகளையும் நம்முடைய தாக்குதல்களுக்கு எதிராக, எல்லா மக்களுக்கும் முன்பாக ஆதாரம் கூறும்படி எல்லாக் கட்சிகளையும் கட்டாயப் படுத்தியது. மேலும், தங்களது எதிரிகளோடு பாராளுமன்றத்தில் பேசுவதற்கான மேடையொன்றை, நமது பாராளுமன்றப் பிரதிநிதிகளுக்கு அது நல்கியது. வெளியேயுள்ள மக்கள் கூட்டத்தோடு பேசும் வாய்ப்பையும் நல்கியது. பத்திரிகைகள் அல்லது கூட்டங்கள் ஆகியவற்றில் காணப்பட முடியாத அதிகாரத்தோடும், விடுதலையோடும் பேசும் வாய்ப்பினை அது அளித்தது. தேர்தல் பிரச்சாரங்களும், பாராளுமன்றத்திற்குள்ளாக சோஷலிச சொற்பொழிவுகளும், அவர்களது சோஷலிச விரோத சட்டத்தை உடைத்துக்கொண்டு ஊடுருவும்போது, அரசாங்கத்திற்கும், பூர்ஷுவாக்களுக்கும் அவர்களது சட்டம் என்ன பயன் தருவதாக இருந்தது?

எல்லோருக்கும் வாக்குரிமை என்பதை இவ்வாறு வெற்றிகரமாக பயன்படுத்திய போதிலும், ஒரு முற்றிலும் புதிய பாட்டாளி வர்க்க போராட்ட வழி முறை நடைமுறைக்கு வந்து, அது மேலும் விரைவான வளர்ச்சியும் அடைந்தது. பூர்ஷுவாக்களின் ஆட்சி அமைக்கப்பட்டு விளங்கிய அரசு ஸ்தாபனங்களில், இந்த அரசு ஸ்தாபனங்களுக்கு எதிராகவே போராடும் வாய்ப்புகளை உழைக்கும் வர்க்கத்துக்கு மேலும் இது வழங்கியது. குறிப்பிட்ட டையட்களுக்கும் (மாநகராட்சி மன்றங்களுக்கும்) நகராட்சி சபைகளுக்கும், தொழில் மன்றங்களுக்கும் நடந்த தேர்தல்களில் தொழிலாளர்கள் பங்கெடுத்துக் கொண்டனர். பூர்ஷுவாக்களுக்கு எதிராக ஒவ்வொரு பதவிக்கும் அவர்கள் போட்டியிட்டனர். இவைகளை நிரப்புவதில், பாட்டாளி வர்க்கத்தின் கணிசமானதொரு பகுதி பங்குடையதாக விளங்கியது. ஆக பூர்ஷுவா வர்க்கமும் அரசாங்கமும் தொழிலாளர் கட்சியின் சட்ட விரோதமான நடவடிக்கையைவிட, சட்ட ரீதியான நடவடிக்கையிடத்து அதிக அச்சங்கொண்டதாக விளங்கியது. கிளர்ச்சியின் விளைவுகளைவிடத் தேர்தல்களின் விளைவுகளைக் கண்டு அச்சமுறத் தொடங்கின.



ஏனெனில் இங்குங் கூட போராட்டத்தின் நிபந்தனைகள் அத்தியாவசியமானவைகளில் மாற்றமுற்று இருந்தன. 1848 வரை ஒவ்வொரு இடத்திலும் பிரச்சனையை முடிவு செய்த பழைய பாணி கிளர்ச்சி, தடைகளை ஏற்படுத்தித் தெருச் சண்டையிடுதல் போன்றவைகள் கணிசமானதொரு அளவிற்குக் காலங்கடந்தவைகளாகி விட்டன.

உணர்வில்லாத மக்கள் கூட்டங்களின் தலைமையேற்று சிறிய உணர்ச்சி பூர்வ சிறுபான்மையினரால் நடத்தப்படுகின்ற புரட்சிகள், திடீர் தாக்குதல்கள் ஆகியவற்றிற்கான காலம் கடந்து விட்டது. சமூக அமைப்பின் பூரண மாற்றம் என்பது பிரச்சினையாகவுள்ள இடங்களில், மக்கள் கூட்டமே அதில் இருந்தாக வேண்டும். அவர்கள் ஈடுபடுகின்ற காரியத்தின் விளைவு இன்னதென்று ஏற்கனவே அவர்கள் புரிந்து கொண்டிருக்க வேண்டும். தாங்கள் எங்கே போகிறோம் என்பதை சரீரத்தாலும், உள்ளத்தாலும் உணர்ந்திருக்க வேண்டும். கடந்த ஐம்பதாண்டு கால வரலாறு இதை நமக்குப் போதித்துள்ளது. ஆனல் என்ன செய்யப்பட வேண்டும் என்பதை மக்கள் கூட்டம் அறிந்து கொள்வதற்காக நீண்ட, விடாப்பிடியான முயற்சி தேவைப்படுகிறது. இந்தப் பணியை நாம் இப்போது தொடர்ந்து இருக்கிறோம் என்பது நியாயமானது. அதுவும் இதில் வெற்றி பெறுகிறோம் என்பது விரோதியைக் கலங்கடிக்கிறது.

இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும் கூட, பழைய தந்திரோபாயங்கள் திருத்தப்பட வேண்டும் என்பது அதிகமதிகமாக உணரப்பட்டு வருகிறது. வாக்குரிமையைப் பயன்படுத்தும் ஜெர்மானிய முன்மாதிரி, நமக்குக் கிட்டக் கூடிய பதவிகள் ஆகியவையெல்லாம் எல்லா இடங்களிலும் அப்படியே பின்பற்றப்பட்டுள்ளது. எல்லா இடங்களிலும், தயார் இல்லாமல் தாக்குதல் தொடுப்பது பின்னுக்கு ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளது. பிரான்சு நாட்டில் நூறு ஆண்டுகளுக்கும் மேலாக புரட்சியை அடுத்துப் புரட்சி நிலைமையை முழுவதாகத் துளைத்துச் சல்லியாக ஆக்கி விட்டது. இங்கே சதிவேலைகள் ஆயுதமேந்திய புரட்சிகள், எல்லாவகைப் புரட்சி நடவடிக்கைகள் ஆகியவற்றைத் தனது பங்கில் மேற்கொள்ளாத கட்சி ஒன்றுகூட இல்லை. இதன் விளைவாகப் பிரான்சில் அரசாங்கம் இராணுவத்திடம் நம்பிக்கை வைத்திருக்க முடியவில்லை. பொதுவாக, இங்கே ஜெர்மனியில் உள்ளதைவிட ஆயுதமேந்திய புரட்சிக் கவிழ்ப்புக்குரிய நிபந்தனைகள் அதிக சாதகமாக இருக்கின்றன—இப்படிப்பட்ட பிரான்சில் கூட உறுதியான வெற்றி பெறும் வாய்ப்பு தங்களுக்குக் கிடைக்க அவர்கள் முதலில் மகத்தான மக்கள் கூட்டத்தைத் தாங்கள் வெற்றி கொள்ளாமல் சாத்தியமில்லை என்பதை சோஷலிஸ்டுகள் அதிகமதிகமாக உணர்ந்து வருகிறார்கள். அதாவது இங்கே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள் கூட்டம் என்பது உழவர் பெருங்குடி மக்களாகும். மெதுவான பிரச்சாரப் பணியும், பாராளுமன்ற நடவடிக்கைகளும் இங்கேயுங்கூட கட்சியின் உடனடிப் பணிகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வெற்றிகளுக்கும் குறைவு ஏதுமில்லை. தொடர்ச்சியாகப் பல ஊராட்சி மன்றங்களில் மட்டும் நாம் வெற்றி பெற்றிருக்கவில்லை. பாராளுமன்றத்திலேயே ஐம்பது சோஷலிஸ்டுகள் இடம் பெற்றுள்ளனர். அவர்கள் ஏற்கனவே மூன்று அமைச்சரவைகளையும், குடியரசின் ஒரு ஜனாதிபதியையும் தூக்கி எறிந்திருக்கிறார்கள். கடந்த ஆண்டு பெல்ஜியத்தில் வாக்களிப்பு முறையைக் கடைப்பிடிக்க வேண்டும் என்று தொழிலாளர் நிர்ப்பந்தித்து ஏற்றுக்கொள்ளச் செய்தனர். கால்பங்கு தொகுதிகளில் வெற்றியும் பெற்றனர். சுவிட்சர்லாந்து, இத்தாலி, டென்மார்க் ஆகிய நாடுகளிலும், ஆம், பல்கேரியா, ருமேனியா ஆகிய நாடுகளிலுங்கூட பாராளுமன்றங்களில் சோஷலிஸ்டுகள் பிரதிநிதித்துவம் பெற்றுள்ளார்கள். ஆஸ்திரியாவின் பாராளுமன்றத்தில் (ரீச்ஸ்ராட்) நாம் சேர்த்துக் கொள்ளப்படுவது இனிமேலும் நிறுத்தி வைக்கப்படமுடியாது என்று அனைத்துக் கட்சியினரும் ஒத்துக்கொள்கின்றனர். நாம் உள்ளே நுழைவோம். அது நிச்சயம். இன்னும் விவாதத்திற்குள்ளாக இருக்கும் ஒரே வினா இதுதான்: எந்த வாசல் வழியாக? ருஷ்யாவில் கூட, பிரபலமான செம்ஸ்கி சோபர் (*Zemskv Sobor*) கூடும் போது—இந்தத் தேசிய சபைக்கு இளைஞன் நிக்கோலஸ் அதிக வீணான எதிர்ப்பைக் காட்டுகிறார்—இங்கேயுங்கூட, அதில் பிரதிநிதித்துவம் பெறுவது நிச்சயம் என்பதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொள்ளலாம்.

உள்ளபடியே, நம்முடைய வெளிநாட்டுத் தோழர்கள், இதன் மூலம் கொஞ்சமும் தங்களது புரட்சி உரிமையை விட்டுக் கொடுத்தது ஆகாது. எல்லாவற்றுக்கும் மேலாக, புரட்சிக்குரிய உரிமை உண்மையான ஒரே "வரலாற்று உரிமை"யாகும். எவ்வித விதிவிலக்குமின்றி எல்லாத் தற்காலத்து அரசுகளும் ஆதாரமாகக் கொண்டுள்ள ஒரே உரிமை இதுதான். இதில் 1755-ல் "பாரம்பரிய ஒப்பந்தத்தின்" [எர்ப்வெர்கிளீச்] மூலம் முடிவுக்குக்கொண்டு வரப்பட்ட பிரபுத்துவ புரட்சியாகிய மெக்லன்பர்க்கும் இதில் உள்ளடங்கும். இது மகத்தானதொரு நிலப்பிரபுத்துவ சாசனமாகும். இது இன்றுகூடப் பொருத்தமுள்ளதாகும். புரட்சி உரிமை ஐயப்பாட்டுக்கிடமேதுமின்றி பொதுவான உணர்வில் அங்கீகரிக்கப் பட்டிருப்பதால், தளபதி வான் போகஸ்லாவ்ஸ்கியுங் கூட அரசாங்கத்தைத் தந்திரமாகக் கவிழ்ப்பதற்குரிய உரிமையைப் பெற்றுக்கொள்கிறார். இதைத் தனது கெய்சருக்காகப் பயன்படுத்த முனையும் போது, இந்தப் பொதுவான உரிமையிலிருந்து மட்டுமே பெற முடிகிறது.

ஆனால் மற்ற நாடுகளில் என்னதான் நடந்தாலும், ஜெர்மானிய சமூக ஜனநாயகம் சிறப்பானதொரு இடத்தை வகிக்கிறது. உடனடியான எதிர்காலத்திலாவது இதற்கொரு சிறப்புப்பணி இருக்கத்தான் செய்கிறது. வாக்குப் பெட்டிக்கு அது அனுப்பும் இரண்டு மில்லியன் வாக்காளர்களும், வாக்காளர்கள் அல்லாது அவர்களுக்குப் பின்னே நிற்கும் இளம் ஆண்களையும், பெண்களையும் சேர்த்துப் பார்க்கும்போது, அவர்கள் எண்ணிக்கை மிக்கவர்களாகவும், மிகுந்த நெருக்கம் பெற்ற மக்கட் கூட்டமாகவும், சர்வதேச பாட்டாளிவர்க்க சேனையின், அறுதி பலம் வாய்ந்த "திடீர்தாக்கு நடத்தும் அணியாகவும்" விளங்குகின்றது. இந்த மக்கட் கூட்டம், அளிக்கப்பட்டுள்ள வாக்குகளில் ஏற்கனவே நாலில் ஒரு பங்கு அளிப்பவர்களாக இருக்கின்றனர். பாராளுமன்றத்தின் (ரீச்ஸ்டாக்) உபதேர்தல்களிலும், தனி ராஜ்யங்களின் சட்ட மன்ற (டையட்) தேர்தல்களிலும், பேரூராட்சி மன்றத் தேர்தல்களிலும், தொழில்துறை மன்றத் தேர்தல்களிலும் எண்பிக்கப்பட்டுள்ளது போல, அது இடையறாது பெருகிக் கொண்டே வருகிறது. அதன் பெருக்கம் தானாக இயங்குவதைப் போலவே, உறுதியாகவும், எதிர்க்க முடியாதபடியும் உள்ளது. அதே சமயத்தில் இயற்கை நியதியைப் போல அமைதியாகவும் உள்ளது. அதற்கு எதிராக அரசாங்கத்தின் குறுக்கீடு அனைத்தும் செயலற்றதாக ஆகிவிட்டது. இன்று கூட இரண்டேகால் மில்லியன் வாக்காளர்களை நாம் எண்ணிப் பார்க்க முடியும். இதே ரீதியில் அது தொடருமானால், இந்த நூற்றாண்டு முடிவதற்குள்ளாக, சமுதாயத்தின் நடுத்தர மக்களின் பெரும்பாலானவரையும், சிறு பூர்ஷ்வா வர்க்கத்தையும், சிறு குடியானவர்களையும் நாம் கவர்ந்து விட முடியும். நாட்டில் அறுதியான சக்தியாக வளரமுடியும். இதற்கெதிராக ஏனைய சக்திகள் அவர்கள் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பணிந்தாக வேண்டி நேரிடும். அன்றைக்கு நிலவும் அரசாங்க அமைப்பின் கட்டுப்பாட்டுக்குத் தானே தாண்டிச் செல்லும்வரை இந்த வளர்ச்சியை தடைகள் இன்றி நடந்தேற வைப்பதும், இவ்வாறு நாடோறும் அதிகரித்துவரும் திடீர்த்தாக்கு அணியை முன்னணிச் சிறு சண்டைகளில் ஈடுபடுத்தி நிலைகுலையச் செய்யாமலும், ஆனால் முடிவான நாளுக்காக அதை அப்படியே உறுதியாக வைத்திருப்பதும்தான் நமது பிரதான பணியாகும். ஜெர்மனியில் உறுதியாக வளர்ந்துவரும் சோஷலிசப் போரிடும் அணிகளைத் தாற்காலிகமாக நிறுத்தக்கூடிய ஒரே ஒரு வழிதான் உண்டு. சிலகாலத்துக்குப் புறம்பே தள்ளி எறிந்துவிடக்கூட இதனால் முடியும்; பட்டாளத்தோடு பெருமளவில் ஒரு மோதல், அதாவது பாரிஸ் நகரில் 1871-ல் நடந்ததைப் போன்ற இரத்தம் சிந்துதல், நீண்ட காலப் போக்கில் அதுவுங்கூட மேற்கொள்ளப் பெறும். பல மில்லியன் கணக்கான உறுப்பினர் கொண்ட ஒரு கட்சி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யைத் துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கி விடுவதற்கு, ஐரோப்பா, அமெரிக்கா ஆகிய இரு கண்டங்களிலும் உள்ள, தொடர்ந்து சுடும் ரைபிள்களாலும் கூடாது; ஆனால் இயல்பான வளர்ச்சி தடைப்படுத்தப்படும். ஒரு வேளை, திவர்த்தாக்கு அவ்வி நெருக்கடியான அந்த நிலையில் இராது இருக்கலாம். அறுதியான மோதல் தாமத மாகலாம், அல்லது நீடிக்கலாம், அல்லது மிகையான தியாகங்கள் கொண்டதாக அமைந்து விடலாம்.

உலக வரலாற்றின் விசித்திரமான பேருண்மை ஒவ்வொன்றையும் மேலது கீழாக்கிப் போடுகிறது, "புரட்சிவாதிகள்", "புரட்டி எறிபவர்கள்" ஆகிய நாம்—சட்ட ரீதியல்லாத வழிமுறைகளில் உள்ளதைவிட மிகச்சிறப்பாகச், சட்ட ரீதியான வழிகளின்மூலம் தூக்கி எறிவதில் நாம் செழிப்புற்று விளங்குகிறோம். தங்களை ஒழுங்கமைதியின் கட்சிகள் என்று அழைத்துக் கொள்கிறவர்கள், தங்களால் உருவாக்கப்பட்ட சட்ட ரீதியான நிபந்தனைகளின்கீழ் அழிந்து பட்டு வருகிறார்கள். ஓடிலான் பேரட்டுடன் சேர்ந்து அவர்கள் தீனக்குரலில் ஓலமிடுகிறார்கள்: லா லீகாலித்தே நௌஸ் டியூ: சட்ட ரீதியாக்குதல் நமக்குச் சாவாகும்; ஆனால் நாமோ, இந்தச் சட்ட ரீதியான தன்மையின் கீழ், உறுதியான தசைகளைப் பெறுகிறோம். சிவந்த கன்னங்களை அடைகிறோம். நித்திய வாழ்வு பெற்றவர்களைப் போலத் தோன்றுகிறோம். அவர்களை மகிழ்விப்பதற்காக நாம் பயித்தியக்காரத்தனமாகத் தெருச் சண்டைகளுக்கு இழுத்து விடப்படாமல் இருந்தால், இறுதியில் இந்த சாவுக்கேதுவான சட்டத் தன்மையைத் தாங்களாகவே உடைத்துக் கொண்டு போவதைத் தவிர அவர்களுக்கு வேறு ஒன்றும் வழியிராது!

இப்படிப்பட்ட கவிழ்ப்பு, சட்டத்தை மீறாமல் நடைபெற முடியாது. தெருச் சண்டைக்குத் தாங்கள் கவர்ந்திழுக்கப் படுவதை விடாது மறுத்துவரும் தொழிலாளர்களை அடையும் சாத்தியமான ஒரே வழியை, ஒருவேளை, பிரஷ்ஷிய அதிகார வர்க்கத்தை சேர்ந்த ஹெர் ரோஸ்லரும், பிரஷ்ஷிய தளபதியாகிய ஹெர்வான் போகஸ்லாவ்ஸ்கியும் காட்டியுள்ளார்கள். அரசியல் சட்ட மீறல், சர்வாதிகாரம் எதேச்சாதிகாரத்துக்குத் திரும்புதல் ரெஜிஸ் வாலன்டாஸ் சுப்ரீமா லெக்ஸ்!* எனவே, நண்பர்களே, துணிவோடு இருங்கள்; இங்கே அரை வேக்காட்டு நடவடிக்கைகள் பயன்படா; இங்கே முழுமையாகச் செயல்பட்டாக வேண்டும்!

லெனினது போல்சவிக் கட்சியும் கூட 1906 முதலாவது டூமாவிற்கான (பாராளுமன்றம்) தேர்தலைப் பகிஷ்கரித்தது. 1907 ல் நடந்த இரண்டாவது டூமாவிற்கான தேர்தலிலே 15 போல்சவிக் அங்கத்தவர்களும் 3 அனுதாபிகளும் பங்கு கொண்டனர். இவர்கள் யூன் 3, 1907 ல் கைது செய்யப்பட்டனர். இந்தத் தேர்தலிலே

(21-ம் பக்கம் பார்)



MILITARY JUNTA-THE ONLY SOLUTION!

FINANCE MINISTER RONNIE DE MEL

The out growing economic problem in SriLanka which endangers the already poor standards of living has paved the way to another racial holocaust in SriLanka. The UNP has boosted the 5 Billion rupees debt to an unthinkable 42 Billion inaccordance with I.M.F's (International Monetary Fund's) directives.

The UNP government has already provoked three communal violance in SriLanka and systematically diverting the political upheavel in to racial frenzy. On the 19th of may more than 150 houses most of them huts in Kanthermadam were arsoned by the armed forces and since then armed forces and thugs are carrying out mass massacre on poor tamils. A new legislation was passed by the government this june to give wide powers to the armed forces to arrest or shoot any suspects. The corpses need not necessarily be handed over to the next of kind and no inquiry is needed!

The UNP government which has build up the armed forces over the past decades has put in effect the new legislation in nation wide to suppress not only the TAMIL EELAM liberation struggle but also to suppress the future upheavals of south Srilankan working class and the poor masses. It is very true that the oppressed masses in every corner of SriLanka would uprise against the UNP government in order to get rid of hunger, poverty, disease etc.

The Williamsburg economic conference and the warning from Bank for International Settlements has made it clear that the capitalist system in danger. The I.M.F which has already given 37 Billion credit in the last six years for high interest rates to SriLanka is crushing the very existence of every SriLankan and further urging the UNP to devalue the rupee once more and to raise the prices for basic goods. To clarify this point finance minister Ronnie de Mel has warned

[P.T.O]



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

the I.M.F that their conditions could only be met by bringing the military Junta in SriLanka.

The world imperialism which is already shakened by the global debt crisis would learn the very same lesson in SriLanka in the near furture as in Vietnam, Iran and now in El-Salvador.

## SUMMERSET OR SEMI-COUP

The President of SriLanka Mr.J.R. Jeyawardena had given an interview to "THE HINDU" It is reappeared in SriLankan News-papers notably the Government controlled DAILY NEWS of May 10, 1983. It said"During the Pakistan-Indian war. Pakistan planes landed in SriLanka to re-fuel on the way to Bangaladesh.She allowed it.India was very much annoyed about it.So Mrs.Bandaranike even thought India might invade.Mrs.Bandaranike went America,had a secret conference with Mr.Nixon She was staying in our Embassy. Mr.Nixon gave her lunch,a red carpet lunch, called his military officials. They talked it over in case there is trouble America would help her. Then there was the American fleet there in the bay of bengal. Before that She said "Dont come here"(now)She invited the admiral to come, gave him dinner.

Why Jeyawardena a humble servent of American Imperialism Exposing his counter revolutionary allies? Is American Imperialism had no hope on Jeyawardena. Why a hundred and eighty degree turn suddenly.

Is any invisible attempted military coup-detat took place to over throw Jeyawardena? Is Jeyawardena is struggling to prove Bandaranike is the American Imperialist agent and he himself not.

The world economi crisis had develop to the level of breaking, the old counter revolutionary allies.Brazilian junta also challenging the Reagan administratian. Jeyawardena is cocksure about no Further aid or loan from the Imperialist. The undefeated working class and the oppressed tamils are preparing for a revolutionary of fensive. Imperialists have no energy to rescue Jeyawardena. Because of that now Jeyawardena bigins to discus with stalinist.

## ARMY WANTS THE RIGHT TO OPPRESS TAMILS

In northrn SriLanka in the heart of Jaffna town, hundreds oftamil houses were burned by the armed forces. The armed forces did this in day light without an iota of reluctant. This oppen oppression cant be camonflaged or white washed. To sow the dust in the eyes of the tamil masses, the government had interdicted soldiers as her usual drama.

As soon as these measures were taken; the armed foces were rebelled. Ninetyseven soldiers from the Anuragupura Barracks walk out. They had shauted slogans of Intemidation.The Leftinant Calonal Perara who lead this rebelion group had forced to take compulsary leave.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## BIG TAMIL PROTEST MARCH IN SYDNEY:

A vast protest march organized by the Sydney Tamil Association took to the busy main streets of Sydney on Saturday 11th June, protesting the violation of Human Rights of Tamils in Sri Lanka. Tamils hailing from Tamil Nadu, Malayasia, Singapore and South Africa also joined in the protest, along with a large number of Australians from various Church Groups and Members of the Amnesty International, Sydney. A main focal area of the protest was outside the Town Hall of Sydney inside where the governing Labour Party was holding its Annual Committee Sessions.

Marchers carried a coffin carrying the label "DEMOCRACY WHICH WAS AILING IN SRI LANKA SINCE 1948 FINALLY DIED ON 3RD JUNE, 1983".

The following day, 12th of June, the President and Committee Members of the Eelam Tamil Association of Australasia had a personal discussion with the Australian Foreign Affairs Minister, Mr. Bill Hayden, concerning the problems of the Tamils in Sri Lanka.

### POLICE POWER

Judicial system in SriLanka is disintegrating.Onthe 11th of June plane cloths police men and hired thugs demostrated against judges of the supreme court with derogatory placards and slogans. Colombo-3 police station officer in charch Hector Perara was convicted and fined Rs 2500. This Judgement was given by Mr.Justice P.C.G.Ratwatta, Mr.Justice Percy Collinthomy and Mr.Justice, J.F.A.Soysa Because of this Judgement all the police forces were rebclled. This incident is not accident in SriLanka. Law breaking and inhuman activities by the armed foces is quite common in SriLanka.

Under the new public security act police can murder any human being. This new act was the generlisation of previous atrocities of armed forces, Judicial system is the hihest instituion of administration is disintegrating in SriLanka.

### BICYLE NEEDS LICENCE

In the northern and eastern provinces of SriLanka,the tamils predominatly living areas, the Government had implemented a new law. Every bicycles have to be have a license. This sort of funny law not existing in any port of the world. That is the panic situation preveiling in SriLanka.

### TAMIL EELAM CAUSE CONVASSED AT INTERNATIONAL CONFERENCE

The TAMIL EELAM cause was vigorously canvassed recently at Paris at a conference of International Organizations representing oppressed people all over the world.

At the conference where representatives of liberation organizations from El Salvador, Guatemala, Palestine and other countries participated THE TAMIL EELAM LIBERATION CONCIL (France) focussed attention on the oppression the Tamils in Eelam face. The TELF also met the delegates individually and briefed them about the Tamil Eelam liberation struggle

[SATURDAY REVIEW]



(24-ம் பக்கத் தொடர்ச்சி)

4 போல்சவிக்குகள் பாராளுமன்றம் சென்றிருந்தனர். 1912ம் ஆண்டு நடந்த 4வது டூமாவிற்கான தேர்தலில் 6 போல்சவிக்குகள் பங்கு கொண்டிருந்தனர். [1913ம் ஆண்டு பாராளுமன்றக் குழுவான மென்சவிக்குகளிடமிருந்து பிரிந்து ரஷ்ய சமூக ஜனநாயக தொழிலாளர் குழுவென்று பெயர் வைத்து இயங்கினர்]. இவர்கள் 1914 நொவம்பர் 6ல் கைது செய்யப்பட்டு 1915ல் குற்றவாளிகளாக தண்டிக்கப்பட்டனர்.

இந்தப் பாராளுமன்றக் குழுவே போல்சவிக் கட்சியினது சட்டபூர்வமையமாக விளங்கியது. இவர்களே வெகு ஜனங்களினுள்ளே அரசியற் தலையீடு செய்தனர். இவர்கள் பாராளுமன்றத்தினுள்ளே தொழிலாளர்கள் கொள்கைக்கான விசாரணை, வேலைநீக்கம் செய்யப்பட்டதிற்கான நீதியின்மை போன்ற நலத்தை விட்டுக் கொடுக்காமல் விவாதித்தனர். மார்க்சிய, லெனினிசம் இதுவாக இருக்க தங்களை மார்க்சிய, லெனினிச வாதிகள் என்றும், தமக்கு சோஷலிசத் தமிழீழம் வேண்டும் என்றும் சொல்பவர்கள் ஏன் இந்தப் பகிஷ்கரிப்பு வாதத்தை பேசுகின்றனர். இதனை இவர்கள் சாதித்தது ஒக்டோபரில் ஜெயவர்த்தனவை இலகுவாக ஜனாதிபதியாக வழி திறந்து விட்டதே.

தோழர் இலசேகரமும் அவரது தலைமையில் இயங்கும் பாதுகாப்பு இராணுவமும் சிறிதும் நா கூசாமல் எங்களுக்கு வெளிநாட்டுதவி தேவையில்லை என்று சொல்லிவது மிக வருந்தத்தக்க செயலாகும். அவர்களது வாதம் என்னவெனில் U.N.P யினது 1 லட்சத்திற்கு மேலான ஆயுதப்படையை வெல்வதற்கு 35 லட்சம் தமிழ் மக்களையும் ஆயுதபாணியாக்கினால் போதும் என்பதே.

ஒரு அரேபிய நாடுகளும் ஐக்கியப்பட்டும் கூட 74ல் இஸ்ரேலிடம் ஏன் இவை தோற்றன? பாக்லண்ட் (FOLKLAND) சண்டையிலே 6000 மைலுக்கு அப்பாலிருந்து வந்த பிரித்தானியர், எவ்வாறு ஆர்ஜென்டீனா படைகளை தோற்கடித்தனர்? விமான ஓட்டியில்லா விமானமும் குண்டு போடவும், ரொக்கட் தாக்குதல் நடாத்தும் விமான



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வளர்ச்சியுமுள்ள இந்த நாட்களில், U.N.P உச்சியில் இருந்து உள்ளங்கால் வரை நவீன ஆயுதம் தரித்து நிற்கையிலே, பாதுகாப்பு இராணுவத்தினர் இப்படி உரைப்பது மிகவும் வேதனைக்குரிய விடயமாகும்.

வெளிநாட்டுறவை ஏற்படுத்தும் மூலோபாயங்களை கடைப்பிடியாமலும், ஏன் தமிழ்நாட்டரசாங்கமே திரு.உமா மகேஸ்வரனைச் சிறையில் வைக்கும் நிலைமையை அனுமதித்துக் கொண்டும், தமிழ்மக்கள் தனித்து நின்று எவ்வாறு போராடுவது? U.N.P யிற்கு C.I.A உட்பட முழு முதலாளித்துவ அரசுகளின் உதவியும் கிடைக்கையில், தமிழ்தலைவர்களான அமிர்தலிங்கம், A.J. வில்சன், குமார் பொன்னம்பலம், தொண்டமான் போன்றோர் இன்றும் U.N.P க்கு பிறகால் நிற்கும் பொழுதும், நாம் எவ்வாறு தனித்து நின்று போராடுவது?

தமிழீழப் போராட்டத்திற்கு சர்வதேச உறவு தேவை இல்லை என்பது துலாம்பரமான அரசியற் பார்வையற்றதின் விளைவே ஆகும். எங்களது அண்டை நாடான இந்தியா, பாக்கிஸ்தான், பங்களாதேஷ் தொழிலாளவர்க்கத்தின் தலைமை இல்லாமல் ஒருபோதும் தமிழீழம் யதார்த்தமாகாது. இன்றைய உலக முதலாளித்துவத்தின் கட்டுக்கடங்காத நெருக்கடி இந்திய உபகண்ட தொழிலாளவர்க்கத்தை மட்டுமல்ல, தென்னிலங்கையிலுள்ள தொழிலாளவர்க்கத்தையும் உசுப்பிவிடத்தான் செய்யும்.

கடந்த கால இனக்கலவரத்தின் போதும், இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இனக்கலவரத்தின் போதும் தொழிலாளவர்க்கம் தமிழ்மக்களை காப்பாற்ற வரவில்லைதான். 42 பில்லியன் ரூபா கடனையான U.N.P அரசாங்கத்திற்கு ஏகாதிபத்தியவாதிகளிடமிருந்து மேலும் கடன் கிடைக்கப்போவதில்லை. 50 சதவீதத்திற்கு மேலான ஏற்றுமதி வீழ்ச்சியும், மேலும் கடன் கிடைக்கப்பெற நிலைமையும் நிலவுங் கால கட்டத்தில் வர்க்கப் போராட்டம் நிகழ்வதை ஒருவராலும் தடுத்து நிறுத்திவிட முடியாது. இனிமேல் நடக்கப்போகும்



வர்க்கப் போராட்டமானது இப்போது நடக்கும் இனக்கலவரத்திலும் நிறைந்த அழிவோடு நடைபெறப் போவதில்லை. இன்றைய இலங்கைத் தொழிலாளவர்க்கம் எவ்வளவு பிற்போக்கோடு கூட இருந்தாலும் U.N.P க்கு எதிராக கிளர்ந்தான் செய்வார்கள். அவர்கள் ஒடுக்கப்பட்ட தமிழ்மக்களைத் தமது நேசசக்தியென்று காணத்தான் செய்வார்கள்.

ஆதலால் நான் தமிழீழப் போராட்டமானது வெறுமனே தமிழீழம் கிடைப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், தமிழ் மக்களிடம் தோற்கும் ஆயுதப்படை ஆயுதமேந்தப் போகும் தொழிலாளவர்க்கத்தோடும் தோற்கத்தான் போகின்றது. சோஷலிசத் தமிழீழம் கிடைப்பதென்பது இலங்கை முழுவதும் புரட்சியைக் கொண்டுவரவல்லது. இலங்கையில் மட்டுமல்ல அது இந்திய உபகண்டத்தையே உசுப்பிவிடும்.

மாக்ஸியம் மேல்மட்டப் பார்வையை ஊடுருவிச் சென்று முதலாளித்துவத்தின் நெருக்கடிகளையும் அதற்குள் நடைபெறும் மாற்றங்களையும் காண்பதால், தமிழீழப்புரட்சியானது, தன்னுடன் சேர்த்து முழு இலங்கையிலும், புரட்சியை இழுத்துக் கொண்டு வருவதையும், முழு இலங்கைப் புரட்சியானது தன்னுடன் சேர்த்து இந்திய உபகண்டம் முழுவதிலும் புரட்சியைக் கொண்டு வருதலையும், அது மேலும் உலகப்புரட்சியை கொண்டு வருதலையும் அறுதியிட்டுக் கூறுகின்றது.
[MARXISM PENETRATES SURFACE APPEARANCE AND REVEALS THE UNDERLYING AND DEVELOPING CRISIS OF CAPITALISM, IN WHICH TAMIL EELAM REVOLUTION IN NORTH CEYLON UNFOLDS, ALONG WITH THE ALL CEYLON REVOLUTION, AS A PART OF THE INDIAN SUBCONTINANT SOCIALIST REVOLUTION i.e:- PART OF THE WORLD REVOLUTION].

மாக்ஸிய, லெனினிசம் என்பது உலகப் புரட்சிக்கட்சியைக் கட்டிவளர்ப்பதென்பதை மட்டுமே கூறுகிறது. இதை வாசித்த மாத்திரமே நூற்றுக்குத்தொண்ணூற்றென்பது வீதமானவர்கள் பயப்படுவர். இருந்தாலும் இது அசைக்க முடியாததும், மாற்றியெழுத முடியாததுமான உண்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாக்ஸ் எவ்வாறு முதலாவது உலகக் கட்சியைக் கட்டிவளர்க்கப் பிரயத்தனப்பட்டார் என்பதை வாசித்தவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கு சர்வதேச சம்பந்தங்களை வென்றெடுத்தல் முடியாததென் என்ன நம்பிக்கையை இழக்க மாட்டார்கள். லெனின் மூன்றாவது சர்வதேசக் கட்சியைக் கட்டியெழுப்பும் பொழுது, இந்தியாவிலும், தூர கிழக்கிலும் எவ்வாறு கட்சிக் கிளைகளை ஆரம்பிக்கப் பிரயத்தனம்பட்டார் என்பதை வாசித்தவர்கள் தமிழீழப் போராட்டத்திற்கு வெளிநாட்டுதவிகளை வென்றெடுக்கலாம் என்பதில் கிஞ்சித்தும் சந்தேகப் பட மாட்டார்கள்.

தமிழீழப் போராட்டத்திற்கு உதவ வந்த நீண்ட அன்புக் கரங்களை நாம்தான் இக்கெனப் பிடிக்கத் தவறினோம். தெற்கு இந்தகமாக இருந்தது அமிர்தலிங்கமும் அவரது தமிழர் விடுதலைக் கூட்டணியும் என்பதை தமிழீழ விடுதலை இராணுவம் நன்கே உணரும். எந்த இயக்கத்தால் வெளிநாட்டு உறவை ஏற்படுத்த முடியுமோ அந்த இயக்கத்தால் மட்டுமே தமிழீழம் கிடைக்கும். எந்த இயக்கம் தனக்கு வெளிநாட்டு உதவிகளை பெறக் கூடிய சக்தியுள்ளதாகத் தான் வரவேண்டும் என்று யோசிக்கிறதோ அந்த இயக்கத்திற்கே வெளிநாட்டுதவி கிட்டித் தமிழீழம் பெறக்கூடிய சக்தியைப் பெறும்.

எந்த இயக்கம் தனது அங்கத்தவர்களுக்கு அல்லும், பகலும் அனவரதமும், கனவிலும் நனவிலும், விடுதலை, ஒடுக்குமுறை, அரசியல் என்பவற்றை அவர்களது காதுகளிலே அதிர்ந்த வண்ணம் இருக்கச் செய்கிறதோ, அவர்களது மூளைச் சிந்தனை, உணர்ச்சி நரம்புகளை விடுதலை வேட்கையால் சூறையாடி வைத்திருக்கிறதோ அதுவே புரட்சி செய்யக் கூடிய இயக்கமாகும்.

இப்பேற்பட்ட இயக்கத்தை கட்டி வளர்ப்பதற்கான முன்முயற்சியையும், பிரயத்தனையும் தமிழீழ விடுதலை இராணுவத்தோழர்கள் எடுக்க வேண்டும்.





## முதலாளித்துவம் ஏன் நெருக்குவாரத்தில்....

இலாபம் கருதும் முதலாளித்துவ உற்பத்தி முறையானது மீண்டும் ஒரு முறை உள்முரண்பாடுகளால் இயங்க மறுத்து நிற்கிறது. ஆங்காங்கே முதலாளித்துவப் புரட்டர்களும், ஆட்சியாளர்களும் நிற்பனர்களும் கூடி நாட்கணக்கில் பேசியும் இவ்முரண்பாடுகளை தீர்க்க முடியாதது மட்டுமல்ல — இவ்முரண்பாடுகளை தற்காலிகமாவது தாக்குப் பிடிக்கவும் முடியாதிருப்பதையே சென்ற மே மாதம் வில்லியம்ஸ் பேர்க்கில் நடந்த மகாநாடு பறைசாற்றுகிறது.

உலகளாவிய வகையில் பெருகிவரும் வேலையில்லாத்திண்டாட்டம், விலைவாசியேற்றம், வீட்டு வசதியின்மை, ஊட்டச்சத்தின்மை, நோய் முதலானவற்றுடன் வட்டி வீதம் போட்டிபோட்டு ஏறிச் செல்கிறது. உலகில் ஏழு முதலாளித்துவ நாடுகள் கலந்து கொண்ட வில்லியம்ஸ்பேர்க் பொருளாதார மகாநாடு இவ் உலகளாவிய பிரச்சினைக்கான தீர்வின் ஒரு எல்லைக் கோட்டையாவது காட்டியதா என்று கேட்டால் இல்லையென்பதே பதிலாகும். இம் மகாநாட்டில் எடுக்கப்பட்ட ஒரே தீர்மானமாவது மேற்கு ஐரோப்பாவில் இந்த வருட இறுதியில் 572 ஏவுகணைகளை நிறுவுவதும் சோவியத் யூனியனுக்கு எதிராக யுத்தத்தை தயாரிப்பதுமேயாகும்.

இற்றை நாள் வரை முதலாளித்துவ வாதிகள் உலகளாவிய பொருளாதாரப் பொறிவிற்கு அங்கொன்றும், இங்கொன்றுமாக தீர்வு காணப்பட்டுவிடலாம் — 1930 களில் நிலவிய கொடிய வறுமை மீண்டும் ஏற்பட்டு விடாது என போலிக்காவது அறிக்கைகள் விட்டனர். மகாநாடுகள் கூடினர். ஆனால் "வில்லியம்ஸ் பேர்க்" மகாநாடோ பெயரளவில் பொருளாதார மகாநாடே தவிர செயலளவில் மூன்றாவது உலக யுத்தத்தை தயாரிப்பதும் அதற்கு முதற்படியாக 572 ஏவுகணைகளை மேற்கு ஐரோப்பாவில் நிலைநிறுத்துவதும் என்ற வகையில் நிறைவு பெற்றுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலங்கையுட்பட 25 வறிய நாடுகள் $250 பில்லியன் கடனை தலையில் சுமந்த வண்ணம் இருக்கின்றன. 1977 இல் யூ.என்.பி ஆட்சிப் பொறுப்பையேற்ற போது இலங்கையின் கடன் 5 பில்லியன் ரூபாய்களாக இருந்தது. இன்று இக் கடன் தொகை 42 பில்லியன் ரூபாய்களாக (8 மடங்கிலும் கூடி விட்டது) உயர்ந்து விட்டது. இலங்கை ஆர்ஜன்டீனா, மெக்சிக்கோ, பிரேசில் போன்ற நாடுகளின் கடனுக்கான வட்டியையும் வருடாந்த நிலுவைகளையும் செலுத்துவதற்கான தொகை மட்டும் இந்நாடுகளின் ஏற்றுமதியால் கிட்டும் தொகையை விடக் கூடிவிட்டது. ஆர்ஜன்டீனாவால் ஏற்றுமதியால் கிட்டும் ஒவ்வொரு டொலருக்கும் அது 1.5 டொலரை வட்டிக்கும், நிலுவைக்கும் செலவு செய்கிறது.

லத்தீன் அமெரிக்கா, மத்திய அமெரிக்க நாடுகள் தங்கள் கடனுக்கான நிலுவையோ, வட்டியையோ கொடுக்கத் தவறும் பட்சத்தில் அமெரிக்காவில் சேஸ் மான் கட்டன் (chase man-hattan) உட்பட பல வங்கிகள் பொறிவதும் இதைத் தொடர்ந்து முதலாளித்துவ அமைப்பு முறையே பொறிவதும் திண்ணம். பிரேசில் மட்டும் chase manhatten வங்கிக்கு கொடுக்க வேண்டிய பணம் $ 5.1 பில்லியன் ஆகும். பிரேசில் யுந்தா தொடர்ச்சியாக தவணை கேட்டு இழுத்தடிப்பதுடன் தாம் ஆட்சியை விட்டு விடுவதற்கு எப்பொழுதே தயார் என்பதைக் கூறி அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு இன்னலை ஏற்படுத்தியுள்ளது.

எல்சல்வடோரில் அமெரிக்கா மற்றுமோர் வியட்நாமை சந்தித்துக் கொண்டிருக்கும் வேளையிலே தான் உலகளாவிய அளவில் ஏகாதிபத்தியத்திற்கு எதிர்ப்பு அலை வீசுகிறது. முழு லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் யுந்தா ஆட்சியை ஏற்படுத்தி தனது ஆதிக்கத்தை நிலை நாட்டி வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் இன் நாடுகளை



கடன் தொல்லையில் இருந்து காப்பாற்ற முடியாதது மட்டுமல்ல தன்னையே காப்பாற்ற சக்தியற்று நிற்கிறது. யப்பானுடன் வியாபார ரீதியில் போட்டியிட முடியாத நிலையில் அமெரிக்கா யப்பானிய மோட்டார் சைக்கிள்களுக்கான சுங்க வரியை 4.5% - 49.5% இற்கு கூட்டியதன் மூலம் தனது தொழிற்சாலைகளை காப்பாற்ற பாதுகாப்பு வாதத்திற்கு (Protectionism) தாவியுள்ளது. பிரிட்டன் வூட் உடன்படிக்கையில் 1944ம் ஆண்டு யூலை மாதம் உலக சந்தையை எல்லா நாடுகளுக்கும் திறந்து விடவேண்டும் என்ற பிரேரணையை தனது நலனுக்காக கொண்டு வந்த அமெரிக்க ஏகாதிபத்தியம் தற்பொழுது தனது சந்தையை யப்பானுக்கு மூடிவைத்துள்ளது.

பிரித்தானியாவில் வேலையில்லாத் திண்டாட்டம் 3.2 மில்லியனைக் கடந்து விட்ட நிலையிலேயும் ஜேர்மனியில் இந்த வருட இறுதிக்குள் மேலும் 10,000 தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா நடக்கவுள்ள சமயத்திலும் பிரான்சில் விவசாயிகள் இத்தாலிக்கும், பிரித்தானியாவிற்கும் எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள சமயத்திலும், அனைத்து நாடுகளுக்கும் விலைவாசியேற்றம் தொல்லை கொடுக்கின்ற நிலையிலேயும் கூடிய வில்லியம்ஸ் போர்க் மகாநாடு இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண முடியாது 3வது உலக யுத்தத்தை கொண்டு வரும் சதியை தீட்டி சோவியத் யூனியனை சண்டைக்கிழுக்கும் முகமாக ஏவுகணைகளை ஐரோப்பாவில் நிலைநாட்ட முடிவு செய்தனர்.

இது வரை காலமும் அமெரிக்காவில் இருந்து "மா" வரும் "கடன்" வரும் என்றெல்லாம் சொல்லித்திரிந்த இலங்கை ருத்தர வர்க்கமும், யூ.என்.பி. அரசாங்கமும் அமெரிக்காவிலிருந்தோ, சர்வதேச நாணயசபையிடம் இருந்தோ கடன் பெற முடியாதது மட்டுமல்ல பட்ட 42 பில்லியன் ரூபா கடனுக்கு வட்டி செலுத்த மேலும் அத்தியாவசிய பொருட்களின் விலையை உயர்த்த வேண்டியும், ரூபாவை மீண்டும் பெறுமதியிறக்கம் செய்ய வேண்டியும் ஏற்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மேலும் வாழ்க்கைப் பழுவை கூட்டுவதற்கு தங்களால் தாங்கமுடியாது என்று கூறும் றெனி மீமெல், சொல்லியதென்னவெனில் மிலிட்டறி அரசாங்கத்தை கொண்டு வருவதே தவிர வேறு வழி கிடையாதென்பதே!

ஏற்கனவே கொண்டு வந்த மிலிட்டறி அரசாங்கத்தை காப்பாற்ற சக்தியற்று நிற்கும் அமெரிக்க ஏகாதிபத்தியம் எல்சல்வடோர், பிரேசில், ஆர்ஜன்டீனா, இந்தோனேசியா, பாகிஸ்தான், பங்களாதேசுடன் சேர்ந்து இலங்கைக்கும் அரசியல், சமூக நெருக்கடிகளை ஏற்றுமதி செய்து தான் தப்புவதற்கு எடுத்த முயற்சிகள் பலிக்காது போகவே 3வது உலக யுத்த சதியை தூண்டுவதை தவிர வேறு வழி தெரியாது நிற்கிறது.

இலங்கை அரசாங்கம் மேலும் கடன் வாங்க முடியாத நிலைமையிலும் இலங்கை மக்களின் வாழ்க்கைத் தரம் தொடர்ந்து வெட்டி வீழ்த்தப்பட்டுக் கொண்டே போவதையும், இலங்கையின் அரசியல் சமூக பிரச்சனைகள் கட்டுக்கடங்காத தன்மையும் உலக ஏகாதிபத்தியத்தின் - சர்வதேச முதலாளித்துவத்தின் நெருக்கடியோடு சம்பந்தப்படுத்திப் பார்க்க முடியாதவர்களால் தமிழீழப் போராட்டத்தை தயாரிக்க முடியாதது மட்டுமல்ல இவர்களே நாளடைவில் தமிழீழப் போராட்டத்திற்கு தடையாகவும் செயல்படுவர்.

இலங்கை அரசின் வங்குரோத்துத் தனத்திற்கு எதிராக, தொடர்ச்சியாக கூடும் வாழ்க்கைத் தரத்திற்கு எதிராக, தென்னிலங்கை மக்கள் கிளர்ந்தெழத்தான் செய்வார்கள் என்பதை உணர முடியாதவர்களாலும், தென்னிலங்கை மக்களின் படைப்பாற்றல் சக்தியில் நம்பிக்கையில்லாதவர்களும், இலங்கை அரசின் ஒடுக்குமுறை நாடு பரவிய அளவில் மக்களை கிளர்ந்தெழ வைக்கும் என்பதை யூ.என்.பி யின் சர்வதேச சதியுடன் சம்பந்தப்படுத்தியறிந்து எதிர்கால சர்வதேச சதியை மக்களுக்கு எச்சரிக்கை செய்யாதவர்களும் அதற்கேற்ப தமிழீழப் போராட்டத்தை தயாரிக்காதவர்களும் அமிர்தலிங்கம் செய்த அதே தவற்றை செய்கிறார்கள் என்பதை முதலில் உணர்ந்து கொள்வோம்.



# செய்திகள்

## சிக்கரவெட்டியா தொகுதியில் ஜே.ஆர். ஜெயவர்த்தன

"சிக்கரவெட்டியா தொகுதியில் நடந்த கூட்டத்தில் பயங்கரவாத நடவடிக்கைகளை ஒழிப்போம். இப்பயங்கரவாதங்களை தடைசெய்வதற்கு எல்லாக் கட்சிகளும் தங்களது ஒத்துழைப்பை நல்கவேண்டும். எல்லாக் கட்சிகளும் பயங்கரவாதங்களை எதிர்ப்பனவாகவேயுள்ளன. ஆனால் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் மாத்திரம் அப்படியில்லை" என்று கூறினார்.

## அரசின் நீதி குறித்து சிறிமாவோ

நீதியரசர்கள் ஆர்ப்பாட்டம் தொடர்பான அறிக்கையில் முன்னாள் பிரதமர் சிறிமாவோ "ஜனாதிபதி அடிக்கடி பயங்கரவாதத்தை கண்டித்து பாதுகாப்புப்படையினர், மற்றும் பொலிஸ் பிரிவின் ஒழுக்கம், கட்டுப்பாடு பற்றி வலியுறுத்தி வருகிறார். கொலை, கொள்ளை, கற்பழிப்புக்கள் இனக்கலவரத்தில் எமது கட்சியில் சிலர் சம்பந்தப்பட்டதாக அறிவதாகவும், 'இத்தகைய துர்ப்பாக்கிய நிலையினால் கட்சித் தலைமை தாங்கவும் தாம் வெட்கப்படுவதாக கூறியவர் இன்று இத்தகையவர்களுக்கெதிராக எதுவித சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஏன் தொடர்ந்து பதவியில் இருக்கின்றார்" என்று கூறினார்.

* நாடெங்கிலும் 30 தீவைப்புச் சம்பவங்கள், இதில் அடங்குவன 30 தீவைப்புச் சம்பவங்கள், 30 கொள்ளைச் சம்பவங்கள். கூடுதலாக வன்செயல்கள் இடம்பெற்ற இடங்கள் யாழ், வவுனியா தவிர்ந்த ஏனைய இடங்களான குருநாகல், பாணந்துறை, திருகோணமலை, இரத்மலானை, தெனியப்பிட்டிய ஆகிய இடங்களிலேயே இடம் பெற்றுள்ளன.

* வவுனியா நகரில் தொடர்ந்து விமானப்படை வீரர் தொல்லை. இதனால் மக்கள் பீதியடைந்த நிலையில் உள்ளனர்.
* அல்வாய் மயானத்தில் வாலிபரின் சடலம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* வடக்கில் இராணுவ கெடுபிடி அதிகம். போக்குவரத்துகளில் வருவோர் மீது தாக்குதல்.
* மாங்குளத்தில் ரயிலால் துண்டாடப்பட்ட உடலங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள்.
* கிளிநொச்சியிலும் இராணுவத் தாக்கல் அதிகரிப்பு.
* வடபகுதியில் சைக்கிள்களுக்கு இராணுவ லைசென்ஸ்.

* அமெரிக்கப் புத்தகம் வெளியிடும் அதிர்ச்சித் தகவல் மொரார்ஜி சி.ஐ.ஏ. கையாள், நிக்சனுக்கு இரகசிய ஒற்றர்.
* வவுனியாவில் வைத்து கைது செய்யப்பட்ட இராமநாதன் கொடுத்த தகவலின் பெயரில், நெடுந்தீவில் வைத்து இரு வாலிபர்கள் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டனர்.
* திருகோணமலையில் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் போது விரநகரைச் சேர்ந்த ஒரு வீட்டின் மேல் காடையர்களால் கைக்குண்டு வீசப்பட்டுள்ளது.
* பாப்பரசரின் போலாந்து விஜயம் நெருங்கி வருகையில் சுதந்திரத் தொழிற்சங்கத் தலைவர் வலேசா தமக்கு துன்புறுத்தல் கூடுவதாக அறிவித்துள்ளார்.
* கோஸ்டாரிக்கா துறைமுகத்தில் சோவியத் கப்பல் ஒன்று நிக்கராகுவாவிற்கு ஆயுதம் ஏற்றிச் செல்கிறது என்ற சந்தேகத்தின் பேரில் 2 மணித்தியால சோதனைக்குட்படுத்தப்பட்டது.

* திருகோணமலை எம்.பி. இரா. சம்பந்தனின் வீட்டிற்கு இனம் தெரியாத நபர்களால் வீசப்பட்ட கைக்குண்டு இலக்குத் தவறி அவரின் உறவினர் வீட்டைத் தாக்கியுள்ளது.
* பொல்காவலையில் சிவில் உடையில் வந்த இராணுவத்தினர், வி. ஜெயராகவன், ஆர். பாஸ்கரன் என்னும் 2 வாலிபர்களை தாக்கி கத்தியால் வாய்களை கிழித்தனர்.



## வவுனியா ஆத்திரமூட்டலும், இனக்கலவரமும்.

கந்தர்மடம், வவுனியாவில் நடந்த ஆயுதப்படையினரின் ஆத்திரமூட்டல்கள் இலங்கை முழுவதிலும் இனக்கலவரமாக உருவெடுத்துள்ளது. இம்முறை வழக்கத்துக்கு மாறாக ஆயுதப் படைகள் உடையிலும், சிவிலில் அமர்த்தப்பட்ட காடையர்களும் சேர்ந்து இக்கலவரத்தை நடாத்தியுள்ளனர். இக்காலங்களில் யாழ்தேவியில் வந்த தமிழ் பயணிகளை தென் இலங்கைப் புகையிரத நிலையங்களில் வைத்து பலாத்காரமாக வெளியே இழுத்துச் சென்று தாக்கப்பட்டதாகவும், பலர் காணாமல் போய்விட்டதாகவும் சில பயணிகள் தங்களுக்கு ஏற்பட்ட சித்திரவதைகளையும் பொருட்படுத்தாமல் கண்ணீர் மல்க கூறினார்கள். மேற்படி சம்பவங்கள் நடைபெற்ற போது "ஏன் அடிக்கிறீர்கள்" என்று கேட்ட தமிழ் வாலிபனை வெளியே இழுத்துச் சென்று புகையிரத இலங்கை காவல் படையினருக்கு முன்னால் நையப்புடைத்து, வாயையும் கிழித்தனர். மற்றவர்களை நையப்புடைத்து ஆசனங்களின் கீழ் படுக்க வைத்து அங்கிருந்த சிங்களப் பெண்மணிகளை அவர்களின் மேல் கால் வைத்து இருக்கும்படி கேட்ட போது, அப்பெண்மணிகள் அப்படி செய்யவில்லை.

மேலும் நாட்டின் பல பாகங்களிலும் கொள்ளை, கொலை, வீடெரிப்பு, தாக்குதல்கள், கடைகளை சேதப்படுத்தல், போன்ற காடைத்தனங்கள் நடைபெற்றன. நாட்டின் வேறு பாகங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை திருமலையில் பல கொலைகள், வீடெரிப்புகள், தாக்குதல், தேர், கடையெரிப்புக்கள் அதிக அளவில் நடந்துள்ளமையால் ஊரடங்கு சட்டம் அமுல் நடத்தப்பட்டது. வழக்கத்திற்கு மாறாக இலங்கை முழுவதிலும் உள்ள சகல மாவட்ட பொலிஸ் உட்பட முப்படைகளின் உயர் அதிகாரிகளுக்கு ஊரடங்குச் சட்டம் பிறப்பிப்பதற்கான விசேட அதிகாரம் ஜனாதிபதியினால் வழங்கப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அத்துடன் இனக்கலவரம் உள்நாட்டில் வெறுத்த-மாக உருவெடுக்காமல் இருப்பதற்காக பொலிஸ் உட்பட, முப்படைகளுக்கும் சம்பளத்தை அதிகரித்துள்ளார்.

உலகத்தின் அதிகூடிய அடக்குமுறைகள் நடக்கும் தென் ஆபிரிக்காவில் கூட நீதிமன்றத்துக்கு கொண்டுவந்த பின்புதான் தண்டனை வழங்குவார்கள். ஆனால் இலங்கை-யில் தார்மீக அரசாட்சியில் பொதுசன பாதுகாப்புச்சட்டம் என்ற போர்வையில் அரசு தன்னை காப்பாற்றுவதற்காக விதிகளையே நீதிமன்றமாகவும், படைகளை நீதிபதிகளாக-வும் நின்று நடாத்தியதன் விளைவாக பல தமிழ் இளைஞர்-கள் தெரு நாய்கள் போல் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். இப்படைகளால் சுட்டுக்கொல்லப்பட்ட இளைஞர்களை மரண விசாரணையோ, பின்னர் நீதிமன்ற விசாரணையோ இன்றி ஆயுதப்படைகளே புதைக்கவோ, தகனம் செய்ய-வோ பொதுசன பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. இன்னும் அடுத்தமாகச் சொல்லுவதானால் தமிழீழ விடுதலைக்காகப் போராடும் இளைஞர்களை ஆயுதப்படைகளின் பலிக்கடாக்கள் என்று நினைத்துவிட்டா-ர்கள்?

இத்தொடர்நிகழ்வுகளுக்கு இடையில் எதிர்கட்சி முதல்வர், கொலையில் சம்பந்தப்பட்டதாக கருதி தீவிரவாத இளைஞர்களால் சுடப்பட்ட அலாலுக்கு உண்ணாவிரதம் இருக்க மக்களை அறைகூவி ஆயுதப்படைகளின் அத்துமீறல்களையும், அட்டகாசங்களையும் கண்டிக்காமல், 1965ல் சங்கானை-யில் நடந்த ஜாதி கலவரத்தின் போது பாராளுமன்றத்-தில் கேட்கப்பட்ட கேள்விக்கு வியட்னாம் யுத்தம் என்று கூறி அசட்டை செய்தது போல் தமிழீழத்தில் நடக்காத நிகழ்ச்சி அல்ல இது வென்று அங்கலாய்த்தவாகச் சென்று விட்டார். பொதுசன பாதுகாப்புச் சட்டம் தமிழ் மக்களுக்கு எதிராக கொண்டுவரப்படுகின்றது என்று தெரிந்தும் அதை எதிர்த்து பாராளுமன்றத்தில் கூட்டணி வாக்களிக்க-வில்லையென்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



## வண பிதாக்களுக்கெதிராக வழக்குத் தாக்கல்.

வண பிதா. எ. சிங்கராயர், வண பிதா. டி. ஜெயதிலகா, டாக்டர். டி. டபிள்யூ ஜெயகுலராஜா, விரிவுரையாளர் எம். நித்தியானந்தன் திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகிய ஐவருக்கும் எதிரான வழக்கு 17.06.83 அன்று நீதிபதி றொபேட் சில்வா முன்னிலையில் விசாரிக்கப்பட்டது.

இவர்கள் சார்பில் வாதாடிய எம். சிவசிதம்பரம், பி. பாலா தம்பு ஆகியோர் நிர்வாகத் தடங்கல் காரணத்தை சுட்டிக்காட்டி அரசுதரப்பினர் இந்த 5 எதிரிகளும் சம்பந்தப்பட்ட இரு வழக்குகளை-யும் விசாரணைக்கெடுக்காமல் காலம் தாழ்த்துகிறார்கள். ஆகவே நீதிபதியவர்கள் தமக்குள்ள அதிகாரத்தை பாவித்து துரித விசாரணைக்கு உடன் உத்தரவிட வேண்டுமென கேட்டுக் கொண்டனர்.

இதனையடுத்து 'நீதிபதி வணபிதா ஏ. சிங்கராயர், வண. டி. ஜெயகுலராஜா, எம். நித்தியானந்தன், திருமதி நிர்மலா நித்தியானந்தன் ஆகியோரது வழக்கு யூன் மாதம் 23ம் திகதியிலிருந்து தொடர்ந்து நடைபெறும். ஏதாவது தடங்கல் காரணமாக இவர்களுக்கு விசாரணை நடைபெறவிட்டால் வண. பிதா ஆ. சிங்கராயர், வண. பிதா. அன்ரன் சின்னராசா ஆகியோர் சம்பந்தப்பட்ட வழக்கு கண்டிப்பாக 23ந் திகதி விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என அறிவித்தார்.

## புலிப்படையைச் சேர்ந்தவரெனச் சந்தேகம்.

வாலிபருக்கு விளக்கமறியல்: புலிப்படையைச் சேர்ந்தவரென சந்தேகத்தின் மீது வெலிக்கடை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட வடபகுதி தமிழ் இளைஞர் ஒருவரை வெலிக்கடை பொலிஸார் மாத்தறை நீதிவான் மேலின் ஏ. விஜயதுங்க முன்னிலையில் ஆஜர் செய்ததையடுத்து இளைஞர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். இவர் லண்டன், மே. ஜேர்மனி முதலிய நாடுகளில் கல்வி கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

www.tamilarangam.net

ஜனாதிபதி ஜே.ஆர் ஆல் 12.06.83 அன்று வெளியிடப்பட்ட அறிக்கை பின்வருமாறு:-

யாழ்மாவட்டத்திற்குட்பட்ட பிரதேசத்தில், சட்ட விரோத முறையில் துப்பாக்கிகள், மற்றும் பயங்கர ஆயுதங்கள் வைத்திருப்பின் அல்லது எடுத்துச் செல்லக் காரணமாயிருப்பது பெருங்குற்றமாகும். அதனால் அவர்களுக்கு மரணதண்டனை வழங்கப்படும் அல்லது ஆயுட்தண்டனை வழங்கப்படும். இக்கட்டளையை தொடர்ந்து வெடிமருந்து, தீங்கு விளைவிக்கும் ஆயுதம் போன்றவையை மக்கள் தங்கள் பொறுப்பில் வைத்திருந்தால், அல்லது எடுத்துச் செல்லச் சம்பந்தமாய் இருந்தால் ஜூரிமார் அற்ற மேல் நீதிமன்றத்தால் மரணதண்டனை அல்லது ஆயுட்தண்டனை விதிக்கப்படும்.

## இலங்கைத் தமிழ்மக்களுக்காக சென்னையில் சர்வகட்சி மகாநாடு.

இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் யூலை 23ந் திகதி சனிக்கிழமை தமிழ் நாடு முழுவதும் அனைத்துக்கட்சிப் பொதுக் கூட்டங்களை நடாத்துமாறு சென்னையில் திராவிடக் கழகத் தலைவர் வீரமணி தலைமையில் கூடிய அனைத்துக் கட்சி மகாநாட்டில், **தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.**

தமிழ்மக்கள் மீது நடாத்தப்பட்டும் திட்டமிட்ட தாக்குதலான கொடுமைகளை முடிவுக்குக் கொண்டு வருமாறு அனைத்துக் கட்சியும் மத்திய அரசைக் கோரின. இலங்கையில் இருந்து தப்பி தங்கள் தாயகத்திற்கு மீண்டு வரும் தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு புகலிடம் அளிக்குமாறு தமிழக அரசை வலியுறுத்தி ஓர் தீர்மானத்தை நிறைவேற்றியது. சென்னைச் சிறைச் சாலையில் இருக்கும் இலங்கை தமிழ் ஈழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான வழக்குகளை வாபஸ் பெறும்படியும், அவர்களை இலங்கை அரசாங்கத்திடம் ஒப்படைக்க வேண்டாம் எனவும் மற்றொரு தீர்மானம் வலியுறுத்தியுள்ளது.

## அரசின் திட்டமிட்ட செயலே இனக்கலவரம்.

தமிழ் தீவிரவாத இளைஞர்களால் சாவகச்சேரியிலும், பருத்தித்துறையிலும் பொலிசார் சுட்டுக் கொல்லப்பட்டபோதும், கிளிநொச்சி, உமையாள்புரம், இறிசாட்டுவான் போன்ற இடங்களில் இராணுவம் சுடப்பட்டபோதும் தொடராத இனக்கலவரம் அரசின் திட்டமிட்ட செயலாகவே 18-6-ல் உருவெடுத்தது. இதை உறுதிசெய்வது போன்று, தேர்தலுக்கு (மகர தொகுதி) நடந்த கூட்டத்தில் பயங்கரவாதத்தை முற்றாக அடக்க அரசு தீர்மானித்துவிட்டது என்று உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு ஒரு கிழமைக்கு முன்பே ஜனாதிபதியால் அறிவிக்கப்பட்டதோடும், தேர்தலின் பின்னர் அதற்காக உறுதியான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை "வீரகேசரி" தகவல் வெளியிட்டது. அதேசமயம் 18-6ல் அதிகாலையில் வெளிவந்த "SUN" ஆங்கிலத் தினசரியில் யாழ்ப்பாணத்தில் நடந்த இராணுவ வெறியாட்டத்தில் வீரசிங்கம் மண்டபம், யாழ். ப.நோ.கூ. சங்க நிலைய அலுவலகம் ஆகியன தாக்கப்பட்டதாக செய்தி தந்தது. ஆனால் தாக்க முற்படுகையில் இளைஞர்கள் சுட்ட எதிர்வேட்டுக்களால் இராணுவம் ஏற்கனவே திட்டமிட்டதை நடைமுறைப்படுத்த முடியாமல் போய்விட்டது. இவையெல்லாம் நடைபெற்ற இனக்கலவரம் அரசின் திட்டமிட்ட செயலே என உறுதிப்படுத்துகின்றன.

## மனித உரிமை மீறல் வழக்கில் நஷ்ட ஈடு வழங்க அரசுக்கு உத்தரவு - உயர்நீதிமன்றம் தீர்ப்பு.

8-3-83ல் நடந்த மகளிர் ஆர்ப்பாட்டம் 'உலக சமாதானத்தைப் பேணு', "அணுவாயுதப்போரை நிறுத்து" போன்ற சுலோகங்கள் தாங்கிய வண்ணம் அமெரிக்க தூதரகத்தின் முன்னால், நடைபெற்றபோது திருமதி விவியன் குணவர்த்தனா கைது செய்யப்பட்டமை மனித உரிமை மீறல் சட்டத்தின் கீழ் சட்டவிரோதமானது என உயர் நீதி மன்றம் தீர்ப்பளித்து மனுதாரருக்கு நஷ்டஈடாக

www.tamilarangam.net

2500 ரூபா செலுத்த வேண்டும் என உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

<u>நீதியரசர்களின் வீட்டுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம்.</u>

திருமதி விவியன் குணவர்த்தனவைக் கைது செய்த கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இன்ஸ்பெக்டர் பெரேராவிற்கெதிரான தீர்ப்பையொட்டி நீதியரசர்கள் R.C.(ஆர்)-ரத்வத்த, A-F-சொய்சா, பேர்சி கொலின் தோமஸ் ஆகியோரது இல்லங்களுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தை நடாத்திய ஆர்ப்பாட்டக்காரர்கள் இரத்மலானை, கடவத்த, செப்பாவ ஆகிய இடங்களைச் சேர்ந்த இ.போ.ச பஸ்களிலும், ஒரு தொயாட்டா வானிலும் வந்து இவ் ஆர்ப்பாட்டத்தை நடாத்தினர். ஆர்ப்பாட்டக்காரர்களை வெளியேற்றுமுகமாக நீதியரசர்கள் பொலிசாருடன் தொடர்புகொண்டபோது அவசர தொலைபேசித் தொடர்பு இயங்க முடியாத நிலையில் இருந்தன. இரண்டு தடவைகள் நீதியரசர்கள் தொலைபேசித் தொடர்பு பொலிசாருடன் மேற்கொண்ட போது பிழையான இலக்கம் என பதில் கிடைத்துள்ளது.

ஸ்ரீலங்காவில் சட்டமும் ஒழுங்கும் சிதறிச் சின்னாபின்னமாய் சிதைகின்றது. மனித உரிமை மீறிய பொலிஸ் அதிகாரிக்கு பதவி உயர்வு அரசால் கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீதிமன்ற உத்தரவை அரசு அவமதித்துள்ளது. ஸ்ரீலங்கா அரசின் நீதி யார் கையில் உள்ளது? விசாரணையின்றி தூக்கித்தீர்க்க நீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை. ஆனால் ஐந்து நிமிடங்களில் தூக்குத் தீர்ப்பை ஆயுதப்படைகள் வழங்குகின்றன. அளவுக்கு அதிகமான ஆயுதப்படைகளை பெருக்கியதாலும், அவர்களின் கையில் அதிகாரங்களை குவித்ததாலும் வந்த விளைவுகளே இவைகளாகும். ஸ்ரீலங்காவினது அரசில் ஒரு நாட்டின் அதி உயர்ந்த நீதிபரிபாலனத்துறையே 'உருக்குப் போய்விட்டதால் இன்று நீதியும், மனிதாபிமானமும் முற்றாகச் செத்துவிட்டது.

கந்தர்மடம் தீவைப்பு சம்பவம் தொடர்பாக அதில் சம்பந்தப்பட்ட சில இராணுவத்தினருக்கெதிராக இராணுவத் தலைமைப் பீடம் எடுத்த நடவடிக்கையை ஆட்சேபித்து ராஜரட்ட இராணுவப் பிரிவைச் சேர்ந்த 97 பேர் "பதவி துறப்பு செய்ததுடன் அநுராதபுரம் முகாமிலிருந்து வெளிநடப்புச் செய்தார்கள். இவர்களுக்கான உரிய நடவடிக்கையை இராணுவ தலைமைப்பீடம் எடுப்பதாக அறிவித்துள்ளது. அத்துடன் எக்காரணம் கொண்டும் இவர்களுக்குப் பதவி கொடுக்கப்பட மாட்டாதெனவும் அறிவித்துள்ளது. அத்தோடு இந்த ராஜரட்ட இராணுவப் பிரிவின் அநுராதப்புரம் முகாம் பொறுப்பதிகாரியான லெப்டினன் கேணல் பெரேரா இராணுவ மேலிடத்தால் கட்டாய லீவில் அனுப்பட்டுள்ளார்.

யாழ் ஐ.தே.கட்சிப் பிரமுகர் திலகர் கொலை தொடர்பாக புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 3 வாலிபர்கள் 8.06.83 அன்று இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவ் வாலிபர்கள் மாணவர் இயக்கமொன்றைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படுகிறது. இவர்கள் தெல்லிப்பழையில் கேம்பிராங் காலில் இருக்கும் போது கைதானார்கள். அவர்களிடமிருந்து பல துண்டுப்பிரசுரங்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளன.

அவசரகாலச் சட்டத்தின் கீழுள்ள சகல அதிகாரங்களையும் பயன்படுத்தி வடபகுதியில் நடைபெறும் பயங்கரவாதங்கள் அனைத்தையும் கட்டுப்படுத்துமாறு ஜே.ஆர். இற்கு ஐக்கிய தேசியக் கட்சி செயற்குழு வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தகுதியற்ற தலைமை.

தமிழருக்கு கூட்டணி என்ற ஒரு தலைமை
உமிழ்வதற்கு நாவில் ஈரமில்லை ஊர்நாட்டில் நடக்கின்ற நிலைமை
தளபதிக்கு என்பவமே நாட்டம் நடந்து வந்த பாதையின் பழமை
அழிவதுதான் தமிழருக்கு ஆவது நடக்கிற்கொருவாட்டி நடக்கின்ற வழமை.

பாலைவனம் பசிபோக பாலஸ்தீனர் படுத்தாரோ ?
சோலைவனம் பசிபோக சோருவதேன் தமிழா நீ !
வேலை பணம் என்றிங்கு விரட்டுகின்ற நாட்களிலே
சாலையெல்லாம் பிணம் மிதக்கும் சத்தியமாய்ச் சொல்லிடுவேன்.

உதயத்துப் பொழுதினிலே தமிழன் உள்ளூர அன்புகொண்டான்
உதிக்கின்ற சூரியனை மதிக்கின்ற மரபு கண்டான்
விதிக்கின்ற ஆணைகளை உடைக்கின்ற உண்மை சொன்னான்
வதைக்கின்ற சேனைகளை அழிக்கின்ற புரட்சி என்றான்.

உயிருடன் ஒரு தமிழன் வாழும் வரை தமிழீழம் எரிமலையாம்
உரசுகின்ற போதெல்லாம் பொங்கி வரும் தீயலைகள்
வயிறுடனே வாழுகின்ற வனிதையவள் பருவங்கை
கனிவுடனே காத்து நிற்கும் கணவன் முன் படை வதைக்கின்ற நிலை (சோக)

தாலியிழந்து பேய்போல தவிக்கின்ற தமிழினமே உணர்க
வேலியில்லா ஆழியிலே விழுந்தப்பார்க்குதடா உன்னினமே
மயிரிழந்தால் உயிர்துறக்கும் கவரிமானினத்துப் பரம்பரையே இனம்
உயிரிழந்து போகையிலே பழமை பேசும் தலைமையும் இனித்தேவையா

பேரழிந்து புகழிழந்து பேசுகின்ற மொழியிழந்து போகையிலே
வேரறுந்து வேப்பமரமொன்று தானும் தீயினிலே விழுந்து வெம்புதடா
நாரறுந்து பூவுதிர்ந்தால் நல்லதொரு மாலையென்ற பேரழியும்
நாவிழந்த பூனையென்றால் ஊரார் வேசியென்று சேறெறிவர்.

— கடலன்னைத்தீவான்

# சுவிற்சலாந்தில் அகதிகள் வாரம்.

I சுவிற்சலாந்து தமிழ் வாலிபர்களும் சுவிற்சலாந்து ஈழத் தமிழ் மன்றமும் இணைந்து எமது இனப்பிரச்சனையை வெளிப்படுத்தும் முகமாக ஜூன் மாதம் 21ம், 22ம் திகதிகளில் அகதிகள் வார நிகழ்ச்சியை கொண்டாடியதோடு கண்காட்சியும் நடைபெற்றது. இவர்களது நிகழ்ச்சிக்காக சுவிற்சலாந்து T.V. நிலையம் 7 நிமிடங்களை ஒதுக்கிக் கொடுத்தது.

## தமிழ் மக்களின் விடுதலைத் தோல்விக்கான காரணங்களை இப்புத்தகம் வெளியிடுகிறது.


- தமிழ் ஈழப் போராட்டத்திற்கு இந்தகமாக இருக்கும் அமிர்தலிங்கத்தின் துரோகங்களை அம்பலப் படுத்தும் முகமாக "தமிழ் ஈழ சர்வதேசக் சம்பந்தக்குழு" வாகிய நாம் புத்தகமொன்றை வெளியிட்டுள்ளோம். இதனை வாங்கிப்படிக்குமாறு தமிழ் மக்களை வேண்டிக் கொள்கிறோம்.

தோழர்களே!
தமிழ் ஈழப்போராட்டத்திற்கு அதிபிரயத்தனத்தை எடுத்துக் கொண்டிருக்கும் "அண்ணம்" பத்திரிகையை வளர்த்தெடுப்பதற்கும் தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக் குழுவை இயங்கவைப்பதற்கும் வேண்டிய பண உதவியை தந்துதவி தமிழ் ஈழப் போராட்டத்திற்கு உங்கள் பங்கின் ஒரு பகுதியை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தோழர்களே!
எமக்கு வரப்போகும் பேர் அழிவிலிருந்து நம்மைப்பாதுகாக்க எமது இயக்கங்களை கட்டி வளர்ப்பதுடன் எமது பொது எதிரி ஜெயவர்த்தனவின் அரசிற்கெதிராக போராட நாம் ஐக்கியப்பட வேண்டிய அத்தியாவசிய காலகட்டத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறோம். தமிழ் மக்களுக்காகப் போராடும் சகல இயக்கங்களுடன் "தமிழ் ஈழ சர்வதேச சம்பந்தக்குழு" வாகிய நாம் கலந்துரையாடலுக்கு அழைக்கின்றோம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# விடுதலை வரலாற்றின் முன்னுரை

தமிழினத்தின் தேசிய விடுதலைக்கு சக்தி மிக்க மக்கள் ஆயுதப் போராட்டம் மூலம் தீர்வு பெறுவதற்குப் புரட்சிகர இயக்க மொன்றை முதன் முதலாக அமைத்தவர் தலைவர் தங்கத்துரை. அவர் அமைத்த **தமிழ் ஈழ விடுதலை இயக்கமே** இன்று தமிழீழத்தில் இயங்கும் அமைப்புகளின் முன்னோடி எனலாம்.

எமது இயக்கம் தனக்கேயுரிய நீண்ட, விரிவான போராட்ட வரலாற்றைக் கொண்டுள்ளது.

தலைவரின் ஸ்ரீலங்கா அரசின் நீதிமன்ற உரை அந்த வரலாற்றில் ஒரு மைல் கல்லாகும். அது எமது தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு பாரிய உந்து சக்தியை அளித்தது எனலாம்.

பாசிச நீதி மன்றத்தில் தலைவரின் வரலாற்றுப் புகழ்மிக்க உரை, சிங்கள அரசின் தலையில் புரட்சிப் பேரிடி விழுமெனும் ஒரு முன்னெச்சரிக்கை; தமிழீழம் பிறக்க இருப்பதற்கு ஒரு தீர்க்கதரிசனம்; ஈழத் தமிழர்களே ஓர் அமைப்பில் திரளுங்கள் எனும் விடுதலைக் கீதம்; தமிழீழ விடுதலை வரலாற்றுக்கோர் முன்னுரை.

ஆம், அது தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் 'பாசறைக் குரல்'.

**நாம் விடுதலை பெறுவது நிதர்ச்சனமான உண்மை. அதன் பின்னர் உங்கள் நாட்டின் சட்டப் புத்தகங்களில் நிரந்தர இடம் பெற்றுவிட்ட எச்சட்டங்களும் எம்மை அணுகா. அப்படியாயின் இச்சட்டங்களையும் பயங்கர வாதத்தையும் எதிர்காலத்தில் நீங்களே சுவீகாரம் எடுப்பீர்கள் என்ற கையறு நிலையை இப்போதே எய்தி விட்டீர்களா?**

(நீதிமன்றத்தில் தங்கண்ணா)

மேற்காணும் புத்தகம்
தேவையானோர் எம்முடன்
தொடர்பு கொள்ளவும்

V. MAHADEVA,
P.O. BOX - 2004,
BÖBLINGEN, 7030
W. GERMANY.

தமிழ் ஈழ விடுதலை இயக்கம்
TELO


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 'தார்மீக' அரசுக்கு எதிரான போராட்டத்தில் தமிழர் கூட்டணி தளர்ந்தது ஏன்...?

## அமிரே விளக்குகிறார்.......



நாம் எமது போராட்டங்களைத் தளர்த்தியமைக்குக் காரணம் கூறுகின்றேன்.

1977இல் ஆட்சி ஐக்கிய தேசியக்கட்சிக்கு கைமாறியது. இது நடந்தது ஜூலையில். 1977ஆம் ஆகஸ்டில் இனக்கலவரம் ஒன்று நடந்தது பெரும் பாதிப்புக்கள் எங்கும் ஏற்பட்டன.

அப்போது உடன் ஒரு விசாரணைக் கமிஷன் வைக்க வேண்டும் எனவும் அதன் பணிப்பின்படி நஷ்ட ஈடுகள் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என்றும் கேட்டிருந்தோம்.

கேட்டவுடனே எமது கோரிக்கையை அரசு மதித்து சன்சோனி விசாரணைக் குழுவை நியமித்தது. அவ் விசாரணைக் குழுமுன் நாம் அளித்த சாட்சியங்கள் மூலம் நமக்கு நடைபெறும் அட்டூழியங்களை மிக இலகுவாக உலகெங்கும் அறிய பிரசாரமாக அவ் விசாரணையை உபயோகித்தோம். கேட்டதும் அரசு விசாரணை கமிஷனை நியமித்து ஆவன செய்து உதவியது. போராட்டத்திற்கும் இடம் கொடுக்கவில்லை. வவுனியா மாவட்டத்தை மதவாச்சியுடன் ஒன்றாக ஒரு மாவட்டமாக இணைத்துவிட நடவடிக்கை ஒன்றை அரசு எடுத்தது. சட்டபூர்வமாக நிறைவேற்றியது.

நாம் தயங்காது பாராளுமன்ற ஆசனங்களைத் துச்சமென மதித்து பாராளுமன்றத்தைப் பகிஷ்கரிக்கத் தலைப்பட்டோம். எமது நிலைகண்டு ஐக்கிய தேசியக் கட்சி அரசு பணிந்தது. ஆக்கப்பட்ட சட்டத்தையே உடனே இயைத்து வவுனியாவை ஒரு தனி மாவட்டமாகப் ,துக்க அமைத்து எமது கோரிக்கைக்குத் தலை வணங்கிற்று.

எமக்கு இப்படியெல்லாம் முக்கிய விஷயங்களில் விட்டுக் கொடுத்து எமது இனத்தை எம் கட்சியை ஒரு அளவிலாவது மதிக்கும் அரசை எப்படி முன்புபோல் மூர்க்கத்தனமாக எதிர்க்கலாம். எதிர்க்கக் காரணம் வேண்டாமா?

யாழ். நூல் நிலையம், கடைகள், வீடுகள் 1981இல் சுட்டெரித்தழிக்கப்பட்ட போது எமது எதிர்ப்பைக் காட்டி நியாயம் கோரினோம். நஷ்ட ஈடுகள் வழங்கப்பட்டன. அன்றியும் ஒரு கோடியே 20 இலட்சம் ரூபா நிதி யாழ். நூல் நிலையம் புனருத்தாரணத்திற்கு ஒதுக்கீடும் செய்யப்பட்டது.

தமிழ்ப் பகுதியில் கண்டிப்பாக தமிழர்களாகிய பொலிசாரை 60 வீதமாவது நியமிக்க வேண்டுமென்று கோரினோம். அவ்வாறே செய்யப்பட்டுள்ளது.

இப்படி எமது முக்கிய கோரிக்கைகளுக்குச் செவி சாய்த்து உடன் நடவடிக்கை எடுப்பதனால் நாம் முன்னைய அரசுக்கு மாறாக எதிர்த்த பாணியில் எதிர்ப்புக் காட்டப் போகிய நிலைமை எழவில்லை. வேண்டிய விடத்து குரல் கொடுக்கிறோம், இவற்றை எமது இளைஞர்கள் உணர வேண்டும்.

தோழர்களே!
உங்கள் கவிதைகள்
கட்டுரைகள் யாவும் தொடர்ந்தும்
பிரசுரிக்கப் படும்
இங்ஙனம்
எண்ணம் ஆசிரியர் குழு



## இந்துக் கரணம்.

1971ம் ஆண்டு சிறிமா பண்டாரநாயக்கா அமெரிக்க படையை இலங்கைக்கு வரும்படி அழைத்ததாக, 'THE HINDU' பத்திரிகைக்கு ஜெயவர்த்தன பேட்டியளித்துள்ளார். பாகிஸ்தான்-இந்தியா சண்டையின் போது பாகிஸ்தான் விமானங்கள் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் இறங்கி எரிபொருள் நிரப்பவிட்டதால் கோபமடைந்த இந்தியா ஆக்கிரமிக்கலாம் என்ற பயத்தினால் அழைத்ததாகக் கூறியுள்ளார். இது வரைகாலமும் அமெரிக்க ஏகாதிபத்தியத்துடன் ஐக்கியப்பட்டு எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளைச் செய்த ஜெயவர்த்தன திடீரென்று இக் இந்துக் கரணத்தையடித்துள்ளார்.

இன்றைய உலக பொருளாதார நெருக்கடிக்குள் ஜெயவர்த்தனவிற்கு கடனோ, உதவியோ கிட்டாதென்பது உறுதியாகி விட்டது. அதனோடு ஜெயவர்த்தனவை தூக்கியெறிந்து மில்டறி யுந்தா ஆட்சியை கொண்டு வரும் வீதிக்கு வராத திரை மறைவுச் சதி, ஜெயவர்த்தனவை அமெரிக்க ஏகாதிபத்தியத்தோடு விவாகரத்து எடுக்கத் தூண்டியதோ தெரியாது. 79 வயதுடைய எதிர்ப்புரட்சிக் கிழட்டுத் தாட்டான் முதன் முதலாக I.M.F எங்களை நிர்ப்பந்திக்கிறது, என்று சொல்லத் தொடங்கியுள்ளார். கிளர்ந்தெழும் தமிழ் மக்களதும் தொழிலாள வர்க்கத்தின் போராட்டத்தில் இருந்து தப்புவதற்காக ஸ்டாலினிஸ்டுகளோடு கலந்துரையாடத் தொடங்கியுள்ளார்.

## PAKISTAN PEOPLE'S PARTY DEMONSTRATION

Pakistan People's Party, Province Baden-Württemberg, is going to demonstrate against the Military Dictorship in Pakistan, on 2.7 83 from "MARIENPLATZ" to"SCHLOSSPLATZ".Time: 13.30uhr.
THE SECRETARY GENERAL OF P.P.P. PAKISTAN, Dr.Ghulam hussain. will lead the Demonstration.

www.tamilarangam.net



The rulers consider that power belongs to them forever

This is the belief firmly held by all ruling classes since time immemorial

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்